சுதந்திரச் சங்கநாதம்

சுப்பிரமணியசிவா
சிறைவாசம்

செ.திவான்

சுதந்திரச் சங்கநாதம்

சுப்பிரமணிய சிவா

சிறைவாசம்

வரலாற்றாசிரியர்

செ. திவான் எம்.ஏ., எம்.ஃபில்.,

ரெஹான் பதிப்பகம்,
106-F/4A திருவனந்தபுரம் சாலை,
பாளையங்கோட்டை – 627 002
திருநெல்வேலி மாவட்டம்.
✆ 0462 - 2572665

ஆசிரியரின் 89–ஆவது நூல்

முதற் பதிப்பு	:	மே 3, 2012
கணினி வடிவமைப்பு	:	நான்சி கணினியகம், பாளையங்கோட்டை.
அச்சிட்டோர்	:	சிவசக்தி அச்சகம், சிவகாசி.
முகப்போவியம்	:	முருகன், காசி கிராபிக்ஸ், பாளையங்கோட்டை
விலை	:	ரூபாய் ஐம்பது

காணிக்கை

'இந்திய நாடு

இந்தியருக்கே

அந்நியருக்கல்ல' என்ற

தேசபக்தியும், இனப்பற்றும்

மொழிப்பற்றும் கொண்ட

இளைய சமுதாயத்திற்கு . . .

செ.திவான்

எண்ண அலைகள்

உலகில், இளம் தலைமுறையினருக்கு, நாட்டிற்கு உழைத்த உத்தமத் தலைவர்களைப் பற்றிய வாழ்க்கை வரலாற்றுச் செய்திகளைத் தெரிவித்திடல் கடமை என்ற உணர்வில் அடியேன் செயல்பட்டு வருகிறேன்.

உலகெலாம் வாழும் தமிழர்கள் நினைத்துப் பெருமை கொள்ளவும், போற்றிப் பாராட்டிடும் நிலையிலும் தரணியில் தனக்கெனத் தனிச்சிறப்புப் பெற்ற உத்தமத் தலைவர் வ.உ.சி. (05.09.1872 - 18.11.1936).

1905 - 1908 வ.உ.சி.யின் அரசியல் வாழ்வில் எழுச்சி மிகு ஆண்டுகளாகும். 1908 பிப்ரவரி 3 முதல் மார்ச் 9 வரை சுப்பிரமணிய சிவாவுடன் இணைந்து வ.உ.சி. ஆற்றிய தொடர் சொற்பொழிவுகள் தமிழக அரசியலில் விடுதலைத் தீயை வளர்த்தது. ஆத்திரங் கொண்ட ஆங்கிலேய அரசினரால் 1908 மார்ச் 12-இல் வ.உ.சியும், சிவாவும் கைது செய்யப்பட்டனர். கோவைச் சிறையிலும் கண்ணனூர் சிறையிலும் வாடிய வ.உ.சி. 4 வருடங்கள், 11 மாதங்கள், 12 நாட்கள் சிறைவாசத்திற்குப் பின் விடுதலையானார்.

வீரத்தலைவர் வ.உ.சி. குறித்து

வ.உ.சி.யின் அழகும் ஆராக்கியமும்

வ.உ.சி.யின் துன்பத்தின் கற்பனை

வ.உ.சி.யின் அரசியல் பெருஞ்சொல்

வ.உ.சி. புகழ் பாடிய முன்னோர்கள்

வ.உ.சி.யின் விஓசி கண்ட பாரதி

வ.உ.சி.யின் வள்ளியம்மை சரித்திரம்

வ.உ.சி.யின் உயில்

வ.உ.சி.யின் பாடல்கள்

வ.உ.சி.யின் நூற்கோவை

வ.உ.சி.யும் பெரியாரும்

வ.உ.சி.யும் பரலி சு.நெல்லையப்பரும்*

வ.உ.சி.யும் தொல்காப்பியமும்

வ.உ.சி.யும் திருக்குறளும்

இலக்கியப் புரட்சியாளர் வ.உ.சி.

இலக்கியப் புரட்சியாளர் வ.உ.சி.யின் சிவஞான போத உரை

வ.உ.சி.யின் சுய சரிதை

என, 16 நூல்கள் வ.உ.சி. குறித்து வெளியிட்டுள்ளேன்.

வ.உ.சி.யோடு இணைந்து இந்தியச் சுதந்திரத்திற்காக சிறை சென்ற சுப்பிரமணிய சிவா குறித்து ஏதாவது புதிய செய்தியினை இளைய தலைமுறையினர் தெரிந்து கொள்ளும் வகையில் நூலாகத் தர வேண்டுமே என்று காத்திருந்தேன். சுப்பிரமணிய சிவா சிறை வாசத்திற்குப் பின் தனது சிறை வாழ்வைப் பற்றி 'எனது சிறைவாசம்' என்ற தலைப்பில் சிறு நூலாக 1918-களில் வெளியிட்டுள்ளார். அதன் சில பகுதிகள் அவர் குறித்த நூல்களில் மேற்கோளாகக் காட்டப்பட்டிருந்தன. முழு நூலும் வேண்டுமே என்று தேடினேன். இறைவன் திருவருளால் இப்போது அந்த நூல் கிடைத்தது. வீர முரசு சுப்பிரமணிய சிவாவின் வாழ்க்கைக் குறிப்புக்களை விளக்கி எழுதி, பின்னர் அவரது 'சிறைவாசம்' நூல் முழுவதையும் தந்துள்ளேன்.

நூலினை நல்ல முறையில் அச்சிட்ட சிவசக்தி ஆர்ட்ஸ் கு.குமரேசன், கணினியாக்கம் செய்து தந்த பாளையங்கோட்டை நான்சி கணினியகம், எனது

---

* மகான் அரவிந்தர் பாண்டிச்சேரி வரும்போது அவரைக் கப்பலில் இருந்து தரைக்கு, குடைபிடித்து அழைத்து வந்தவர், பாரதியின் பாடல்களை அச்சிட்டு இலவசமாக வழங்கியவர் பரலி.சு.நெல்லையப்பபிள்ளை.

முயற்சிகளுக்கு ஊக்கமளித்திடும் துணைவியார் டாக்டர் S. திவானி ஜஹானரா, மகள்கள் தி. நஜாத், டாக்டர். தி.சுஹைனா, மருமகன் டாக்டர். M. முகம்மது அப்துல் மஜீத், பேரன் எம்.ரெஹான் ஆகியோர் என் நன்றிக்குரியவர்கள்.

இந்நூல் வெளிவர உதவிய சதக்கத்துல்லாஹ் அப்பா கல்லூரி தமிழ்த்தறைத் தலைவர் பேராசிரியர் ச.மகாதேவன் அவர்களுக்கு என் நன்றி.

நீதியரசர் I.டேவிட் கிறிஸ்டியான், முதுபெரும் எழுத்தாளர் தி.க.சி., நாவலர் கு.சடகோபன், மருந்தாளுநர் V. ஜெயசிங், தம்பி J. பிரின்ஸ், திருக்குறள் முருகன் ஆகியோர் என் நன்றிக்குரியவர்கள்.

இந்த வாய்ப்பினை வழங்கிய காலத்திற்கும் இறைவனுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

எளியேன் வாழ்வதற்காக எழுதவில்லை.

எழுதுவதற்காகவே வாழ்கிறேன்.

- செ. திவான்

03.05.2012
பாளையங்கோட்டை

ரெஹான் பதிப்பகம்,
கல்வித் தந்தை சுலைமான் இல்லம்,
வள்ளல் வைகோ நூலகம்,
106-F/4A திருவனந்தபுரம் சாலை,
பாளையங்கோட்டை – 627 002
திருநெல்வேலி மாவட்டம்.
✆ 0462 - 2572665

சுதந்திரச் சங்கநாதம்
சுப்பிரமணிய சிவம்

'சுப்பிரமணிய சிவா' என்ற பெயர் இன்றைய இளைய தலைமுறையில் பலருக்குத் தெரியாது. இருபதாவது நூற்றாண்டின் துவக்கத்தில் இந்திய விடுதலை இயக்கத்திற்கு வித்திட்ட தேசபக்தச் செம்மல் கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிக்குத் துணைவர்களாக மகாகவி பாரதியும், விடுதலை முரசம் சுப்பிரமணிய சிவாவும் நின்றனர்.

மூவர் மூட்டிய விடுதலைக் கனல்

வ.உ.சி. சிறந்த அரசியல் தலைவர்; பாரதி சிறந்த கவிஞர்; சிவா சிறந்த மேடைப் பேச்சாளர். இம் மூவர் மூட்டிய விடுதலைக் கனல் தமிழக அரசியலில் 1905 - 1908-களில் தீவிர எழுச்சியை உருவாக்கியது.

1884

1884 அக்டோபர் 4-இல் ஸ்ரீ.பி.ஆர். ராஜம் அய்யர் - நாகம்மை தம்பதிகளுக்குப் பிறந்தவர் சுப்பராமன்.

அன்றைய மதுரை மாவட்டம் 'பெத்தலை கொண்டா' என வழங்கும் வத்தலகுண்டு ஊரில் சன்னதித் தெரு மூப்பிலார் குடும்பத்தில் பிறந்த சுப்பராமனுக்கு ஒரு வயதிற்குள் தந்தை ராஜம் அய்யர் என்ற சபாபதி சர்மா எவரிடமும் சொல்லாமல் வெளியூர் சென்றுவிட்டார்.

அய்யம்பாளையத்தைச் சேர்ந்த தாத்தா அனந்தய்யர் சுப்பராமனையும், அவனது தாயையும் கவனித்து வந்தார். ஒரு நாள் சுப்பராமன் பேச்சு மூச்சற்றுக் கிடந்திட அருகில் உள்ள முனீஸ்வரன் கோயிலுக்குக் கொண்டு செல்ல, குழந்தை நன்றாக ஆக, சுப்பராமன் என்ற பெயரோடு முனீஸ்வரன் என்கிற முனிரத்தினம் என்ற பெயரும் சேர்ந்தது.

1893

சுப்பராமனின் 9-வது வயதில் பிரம்மோபதேசம் நடைபெற்றது. பூணூல் போட்டுக் கொண்ட சுப்பராமனின் பெயர் சுப்பிரமணியசர்மா என மாறியது. அது முதல் 'சுப்பிரமணியன்' என்றே அனைவரும் அழைத்தனர்.

அய்யம்பாளையம் பள்ளிக்கூடம், மதுரை சுப்பிரமணியன் கட்டுச் செட்டி மண்டபத்திலுள்ள பாடசாலை, மதுரை சேதுபதி ஹைஸ்கூல், (பிற்காலத்தில் மகாகவி பாரதி இங்கு சில மாதங்கள் தமிழாசிரியராகப் பணியாற்றினார்) என்று படிப்புத் தொடர்ந்தது.

சுப்பிரமணியன் குடும்பம் வறுமையில் வீழ்ந்தது. பிழைப்புக்காக திருவனந்தபுரம் சென்றனர். திருவனந்தபுரம் 'ஊட்டுப்புறை'யில் இருவேளை பிராமணர்களுக்கு இலவச உணவு சுப்பிரமணியன் டவுண் ஹைஸ்கூல், நேடிவ் ஹைஸ் கூலிலும் படித்தார்.

1899

சுப்பிரமணியனுக்கு வயது 15. மதுரை குட்டி அய்யரின் புதல்வி மீனாட்சி அம்மாள் வயது 6. சுப்பிரமணியன் மீனாட்சி அம்மாள் திருமணம் நடந்தேறியது. சுப்பிரமணியன் கோவை புதிய மைக்கேல் காலேஜில் சென்று படித்தார். பிராமணப் பிள்ளைகள் மீசை வைப்பதில்லை - சுப்பிரமணியன் மீசை வைத்துக் கொண்டார்.

கோடை விடுமுறை திண்டுக்கல்லில் இருந்த உறவினர்களைப் பார்க்கச் சென்றார். தாய் வழி உறவுக்காரரான சுப்பையா சுவாமிகள் சுப்பிரமணியன் தங்கியிருந்த வீட்டுக்கே வந்தார். 'என்னைத் தனிமையில் சந்திக்கவும்' என்று சொல்லிச் சென்றார். சுப்பிரமணியனும் சென்றார்.

உனது வேட்டியை அவிழ்த்துவிட்டு என் எதிரிலே நில் என்றார் சுவாமி சுப்பிரமணியன். சற்றுத் தயக்கத்துடன் நின்றார். கோவணத்துடன் இருந்த சுப்பிரமணியன் அதே

கோலத்தில் அடுத்த வீட்டுக்குச் சென்று தண்ணீர் வாங்கி வா என்று அனுப்பினார்; அவ்வாறே சென்று தண்ணீர் வாங்கி வந்தார் சுப்பாராமன். சுப்பய்யா சுவாமிகளிடம் கொடுத்த போது அவர், 'சிவம்' என்று குரல் கொடுத்தார்.

தனது பெயர் சுப்பராமன், முனீஸ்வரன், முனிரத்தினம், சுப்பிரமணிய சர்மா, சுப்பிரமணியன் என்று அழைப்பார்கள். சுவாமிகள் 'சிவம்' என்று கூப்பிட்டது வேறு எவரையோ? என்று நினைத்தார் சுப்பிரமணியன். சுப்பிரமணியன் நினைத்த போது, சுப்பய்யா சுவாமிகள் உன்னைத்தான் சிவம் என்று கூப்பிட்டேன்! என்றார். ஸ்வாமி என் பெயர் சுப்பராமன் என்கிற சுப்பரமணியன்! நீங்கள் 'சிவம்' என்று என்னைத்தான் கூப்பிடுகிறீர்கள் என்பது எனக்குத் தெரியாது என்றார் சுப்பிரமணியன்.

'யாம் உன்னை அப்படித்தான் 'சிவம்' என்று கூப்பிட்டது. இனி உன் பெயருடன் சிவம் இருக்கட்டும்' என்றார் சுப்பய்யா சுவாமிகள். *

சுப்பராமன், முனீஸ்வரன், முனிரத்தினம், சுப்பிரமணிய சர்மா, சுப்பிரமணியன், சுப்பிரமணிய சிவா பெயர் வந்த வரலாறு இது தான்.

1901

சிவகாசி போலீஸ் சூப்ரெண்ட் ஆபிசில் சாதாரண குமாஸ்தாவாக ஒரே ஒரு நாள் பணியாற்றினார் சுப்பிரமணிய சிவா.

தூத்துக்குடி போலீஸ் சப்டிவிஷனல் ஆபீசில் மாதம் பத்து ரூபாய் சம்பளத்தில் குறுகிய காலம் சிவா பணியாற்றினார் என்ற குறிப்பும் வரலாற்றில் காணக் கிடைக்கிறது.

---

* தீரர் சுப்பிரமணிய சிவா அவர்களின் சகோதரி ஞானாம்பாள் எழுதிய 'திண்டுக்கல் ஸ்ரீ சுப்பய்யா ஓதானந்தர் சரித்திரம்' நூலில் விவரம் காணலாம்.

1902

திருவனந்தபுரத்தில் கொட்டாரக்கரை சுவாமி என்னும் சுவாமி சதானந்தரிடம் சிஷ்ய பாவம் கொண்டு சுப்பிரமணிய சிவா யோகமும் ஞானமும் பயின்றார்.

சட்டாம்பி நவநீத கிருஷ்ண அய்யர்

திண்டுக்கல்லிலிருந்து சுப்பிரமணிய சிவா திருவனந்தபுரம் சென்றார். புகழ் பெற்ற மல்யுத்த பயில்வான் சட்டாம்பி நவநீத கிருஷ்ண அய்யரிடம் குஸ்தி, சிலம்பாட்டங்களைக் கற்றார்.

மாப்பிள்ளை முஸ்லிம்கள்

கேரளத்து மாப்பிள்ளை முஸ்லிம்களிடம் இசையோடு பாடும் முறைகளையும், வீர விளையாட்டுக்களையும் தெரிந்து கற்றார்.

1903

சதானந்த சுவாமிகளின் பழக்கத்தால் திருவனந்தபுரத்தில் 'தர்ம பரிபாலன சமாஜம்' என்ற அமைப்பை நிறுவி ஆன்மீக விஷயங்களைப் பரப்பி வந்தார்.

1906 – தாகூர்கான் சந்திரவர்மா

*ஆரிய சமாஜத்தைச் சேர்ந்த தாகூர்கான் சந்திரவர்மா நாடெங்கணும் சுயராஜ்யம் பிரச்சாரம் செய்து கொண்டு திருவனந்தபுரம் வந்தார். திருவனந்தபுரத்தில் அவர் ஆற்றிய சொற்பொழிவுகள் சுப்பிரமணிய சிவாவின் அரசியல் சிந்தனைகளைத் தூண்டியது. நாட்டில் இவ்வளவு அக்கிரமங்கள் நடக்கின்றவா? என்பதை எண்ணித் துயருற்றார். வெள்ளிதோறும் வீட்டிலும் கூட்டங் கூட்டினார். தானும் பேசினார்; பேச்சு மக்களைக் கவர்ந்தது. அதிகாரிகள் பார்த்தார்கள். சுப்பிரமணிய சிவாவை திருவிதாங்கூர் சமஸ்தானத்தை விட்டு வெளியே போகும்படி உத்திரவு போட்டார்கள்.**

---

* ரா.ஸ்ரீநிவாஸவரதன், சுப்பிரமணிய சிவம் வாழ்க்கை வரலாறு, பாரதி புத்தக நிலையம், மதுரை, 1962, ப. 33.

1906 சூலை – ஆகஸ்ட் – ஜி.சுப்பிரமணிய அய்யர்

சென்னையில் முக்கிய சுதேசிப் பிரச்சாரகர் ஜி.சுப்பிரமணிய அய்யர் 1906 ஆகஸ்டிலும், 1907 சூலையிலும் நெல்லை மாவட்டத்தில் சுற்றுப் பயணம் செய்து உரைகள் பல ஆற்றினார்.

1906 அக்டோபர் 16

தூத்துக்குடியில் வ.உ.சி. சுதேசி ஸ்டீம் நேவிகேஷன் கம்பெனியினை பாஞ்சாலங்குறிச்சி பெருவேந்தன் வீரபாண்டியகட்டபொம்மன் தூக்கிலிடப்பட்ட (அக்டோபர் 16, 1799) நாளின் நினைவாக 1906 அக்டோபர் 16-இல் நிறுவினார். 1907-இல் சூரத் காங்கிரசுக்கு வ.உ.சி.யும் பாரதியும் சென்று வந்தனர்.

1906 டிசம்பர்

மக்களிடையே சுதேசி இயக்கத்தின் வளர்ச்சியைப் பற்றி அறிக்கை அனுப்புமாறு அனைத்து மாவட்டங்களின் ஆட்சித் தலைவர்களையும் சென்னை அரசாங்கம் பணித்தது. நெல்லை மாவட்டத்தின் ஆட்சித் தலைவரைத் தவிர மற்றவர் எல்லோரும் *சுதேசி இயக்கம் மக்கள்மனத்தில் வேரூன்றவில்லை என்று குறிப்பிட்டனர்.*[*]

வெள்ளையர் எதிர்ப்பில் நெல்லை – தூத்துக்குடி

வெள்ளையர் எதிர்ப்புணர்வு நிலவுவதாக ஐயப்படக்கூடிய ஒரே மாவட்டம் திருநெல்வேலிதான், *அதிலும் குறிப்பாக தூத்துக்குடி நகரில்தான் இது அதிகம் நிலவுகிறது என்று நெல்லை மாவட்ட ஆட்சித் தலைவரின் அறிக்கை 1906 இறுதியில் குறிப்பிட்டது.*[**]

---

* ஆ.இரா. வேங்கடாசலபதி, வ.உ.சி.யும் திருநெல்வேலி எழுச்சியும், சென்னை, 1987, ப. 16.

** Note on Tinnevelly Riot in Proceedings of the Judicial Department, Government of Madras, 1911 b, G.O.No. 1542, Judicial and Confidential dated 03.10.1911.

திருநெல்வேலியில்

சுப்பிரமணிய சிவா நடைப்பயணமாகவே கிராமம் கிராமமாகச் சென்று, நாட்டு நடப்பைப் பொது மக்களுக்கு எடுத்துச் சொல்லிக் கொண்டு திருநெல்வேலி வந்தார். ஒரே வேஷ்டி, ஜிப்பா, தலைப்பாகை, கைத்தடி இவைகள்தான் சிவாவின் சொத்து. திருநெல்வேலி நகரைச் சுற்றி வந்தார். கடை வீதியில் 'சுதேசி பண்டகசாலை' (National Emporium) என்ற பெயரில் ஒரு கடை நடந்து வந்தது.

கடையநல்லூரில் கண்டவர்

அதற்குள் சென்றார். அவரது வரவைப் பார்த்ததும் கடையில் சாமான்கள் வாங்கிக் கொண்டிருந்த ஒருவர், ஏற்கனவே கடையநல்லூர் சிவாவின் முழக்கத்தைக் கேட்டவர் அருகில் சென்று நலம் விசாரித்தார்.

ஸ்ரீசங்கர நாராயாண அய்யர்

சுதேசி பண்டகசாலையின் உரிமையாளர் ஸ்ரீ சங்கர நாராயண அய்யர். அவரிடம் சுப்பிரமணிய சிவாவை கடையநல்லூர்க்காரர் அறிமுகம் செய்து வைத்தார். பேரானந்தம் கொண்ட சங்கர நாராயண அய்யர் திருநெல்வேலியில் சில நாட்கள் தங்கி பிரசங்கங்கள் செய்ய வேண்டுமென்று சிவாவிடம் வேண்டினார். சிவாவிற்கு வேண்டிய உடைகளில் ஒவ்வொன்றிலும் இரண்டு வீதம் வழங்கினார்.*

09.01.1908

1908 ஜனவரி ஒன்பதாம் நாள் சுப்பிரமணிய சிவா நெல்லையில் சுதேசிச் சொற்பொழிவுகளை ஆற்றினார்.

சுப்பிரமணிய சிவா நெல்லை வந்த அன்றே பிரசங்கத்திற்கு சங்கர நாராயண அய்யர் ஏற்பாடு செய்தார். முதல் நாள் மறுநாள் 500, மூன்றாம் நாள் 1000 அடுத்த தினம் 5000 இப்படிக்

* ரா.ஸ்ரீநிவாஸவரதன், சுப்பிரமணிய சிவம், வாழ்க்கை வரலாறு, மதுரை, 1962, பக். 33–35.

கூட்டம் பெருகிக் கொண்டே வந்தது. 1908 ஜனவரி 12 வரை நெல்லையில் கூட்டங்களில் உரையாற்றினார் சிவா. அப்போது அவருக்கு வயது 24.

13.01.1908

கல்லிடைக்குறிச்சி, அம்பாசமுத்திரம் பகுதியில் பிரச்சாரம் செய்தார் சிவா. அதனைத் தொடர்ந்து தென்காசி, சிவகாசி, ஸ்ரீவில்லிபுத்தூர், பகுதிகளில் சுதந்திரச் சங்கநாதம் புரிந்தார் சிவா.

சிவாவின் சிம்ம கர்ஜனை நெல்லை மாவட்டம் முழுவதிலும் பேரொலி செய்தது. அதன் பின் சிவா தூத்துக்குடி சென்றார்.

சிவா – வ.உ.சி சந்திப்பு (03.02.1908)

சுப்பிரமணிய சிவா, தேசபக்தச் செம்மல் வ.உ.சி.யை தூத்துக்குடியில் என்று சந்தித்தார்? சரியான தேதி வேண்டுமே என்று தேடினேன்.

1946 மார்ச் – கலைமகள்

1946 மார்ச்சில் வெளிவந்த கலைமகள், (பாத்திப - பங்குனி) விலை அணா 8 193-வது பக்கம் முதல் 288 -வது பக்கங்ளைக் கொண்டது. அதில் பக்கம் 223 முதல் 226 வரை சுப்பிரமணிய சிவா குறித்த கட்டுரை வெளிவந்துள்ளது.

ஸ்ரீ – ஜம்புநாதன்

ஸ்ரீ - ஜம்புநாதன் என்பவர் எழுதிய கட்டுரையில் சுப்பிரமணிய சிவாவின் வார்த்தைகளை அப்படியே தந்துள்ளார். இதோ அந்த வாசகங்கள்.

“லஜபதிராயும் அஜீத்சிம்மரும் நாடு கடத்தப்பட்ட செய்தி என் மனத்திலே ஒரு பெரும் புயலைக் கிளப்பிவிட்டது. அது வரையில் தேச விடுதலை இயக்கத்தில் சிரத்தையற்றிருந்த நான் ஊக்கமாகப் பத்திரிகை படிக்க ஆரம்பித்தேன். என் மனம் வைரம் பாய்ந்து விட்டது. தேச விடுதலைக்கு என் சேவையும்

அவசியம்தான் என்று எண்ணினேன். பிரிட்டிஷ் இந்தியாவிலுள்ள தேச சேவகர்களுடன் தோள் கொடுத்து உழைக்கத் தீர்மானித்தேன். சந்தர்ப்பமும் கிடைத்தது. கட்டிய ஆடையுடன் கிராமம் கிராமமாக நாட்டின் நிலைமையை எடுத்துக்கூறிக் கொண்டே திருவாங்கூர் எல்லையைத் தாண்டி திருநெல்வேலி ஜில்லா தமிழ்நாட்டு மக்களைத் தட்டி எழுப்பி வாழ்ந்து வந்த சிதம்பரம்பிள்ளையைக் காண அவாவுற்றேன். அவரை நேரில் அறிமுகம் இல்லையெனினும் என் உத்தேசத்தைக் கடிதம் மூலம் அவருக்குத் தெரிவித்து விட்டுக் கால்நடையாகவே பிரச்சாரம் செய்து கொண்டு தூத்துக்குடி போய்ச் சேர்ந்தேன். 03.02.1908 அன்று நான் சிதம்பரம் பிள்ளையின் விருந்தாளி. அன்று முதல் ஆயிரக்கணக்கான மக்கள் கூடும் மாபெரும் கூட்டங்களில் நான் பிரசங்கம் செய்தேன். மக்களின் உத்ஸாகம்* கட்டுக்கு அடங்கவில்லை. அவர்களின் ஆவேசம் எங்களுக்கும் ஊக்கம் தந்தது.”

பி.ஸ்ரீ.ஆசார்யா

*‘வங்க நாட்டுப் பிரசங்கியான விபின் சந்திர பாலரைப் போல அவ்வளவு திறமையாக வ.உ.சியும் அவரது தோழரான சுப்பிரமணிய சிவாவும் பேசுவார்கள்’ என்பர் பி.ஸ்ரீ.ஆசார்யா.***

கோரல்மில் வேலை நிறுத்தம்

தூத்துக்குடியில் இயங்கி வந்த ‘கோரல்மில்’லில் பணியாற்றிய தொழிலாளர்கள் பல வழிகளிலும் சித்திரவதைக்குள்ளாயினர். காலை ஆறு மணி முதல் மாலை ஆறு மணி வரை வேலை. சிறு தவறுகளுக்குப் பிரம்படி; தொழிலாளர் வேலை செய்யும் ஆலையின் தளம் தாரினால் (கீல் எண்ணெய்) உருவாக்கப்பட்டிருந்தது. கோடையில் தார் இளகி நிற்கும். இந்தத் தளத்தின் மீதிருந்த தொழிலாளர் பணியாற்றினார். இவர் தம் உரிமைக்காக சிவாவும், வ.உ.சி.யும் குரல் கொடுத்தனர்.

---

* உத்ஸாகம் – உற்சாகம்.

** சுதேசமித்திரன் வாரப் பதிப்பு, 28.12.1947.

23.02.1908

*தூத்துக்குடி நகரில் கோரல்மில் தொழிலாளர்களை ஆதரித்து சிவா முழங்கினார். 'ஆண்டுதோறும் இந்தியாவிலிருந்து இங்கிலாந்துக்குச் செல்லும் பணத்தின் அளவை சிவா குறிப்பிட்டார். இதனைத் தவிர்க்க வேலை நிறுத்தம் செய்யும்படி கூலிகளுக்கு அறிவுரை கூறினார். ருசியப் புரட்சியானது மக்களுக்கு நன்மையளித்துள்ளது.'**

"புரட்சியானது உலகத்துக்கு எப்பொழுதும் நல்லதையே புரியும்" என்று சிவா குறிப்பிட்டார்.**

26.02.1908

*'சுதேசி இயக்கத்தை வெற்றியடையச் செய்யும் எந்த முயற்சியும் தொழிலாளர்களின் கரங்களில்தான் இருக்கிறது; ஆலை முதலாளிகளை முடக்குவதற்கு இரண்டு வழிகள்; இயந்திரங்களுக்கு ஊறு விளைவிப்பது. வேலை நிறுத்தம் செய்வது. இரண்டாவது வழியை தொழிலாளர்கள் பின்பற்றுவது சிறந்தது என்று சிவா முழங்கினார்.'****

27.02.1908

கோரல் மில் தொழிலாளர்கள் வ.உ.சி., சிவா தலைமையில் 27.02.1908 வேலை நிறுத்தத்தைத் தொடங்கினார்.

இருபது போலீசார், இரண்டு அதிகாரிகள் நெல்லையிலிருந்து கலெக்டரின் உத்திரவின்படி தூத்துக்குடி வந்தனர். 144 தடை உத்திரவு பிறப்பிக்கப்பட்டது.

---

* 1905–இல் நடைபெற்ற முதல் ரஷியப் புரட்சி. இப்புரட்சி தோல்வியுற்றது. எனினும் கொடுமையை எதிர்க்கும் உணர்வை மக்களிடம் ஊட்டியது.

** National Archives of India, Calcutta, Records, Government of India, Home Department, Political - A, History of the Disturbances in Tinnevelly and Tuticorin in March 1908, p.7.

*** முற்கூறிய ஆவணம், ப. 8.

28.02.1908

கலெக்டர் விஞ்ச் தூத்துக்குடி வந்தார். அன்று மாலையில் தடை உத்திரவு நடைமுறையில் இல்லாத பகுதியில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. அதில் வ.உ.சி.யும், சிவாவும் உரையாற்றினர்.

பொதுமக்களின் எழுச்சி

வேலை நிறுத்தத்தை நிறுத்தும்படி கலெக்டர் விஞ்ச் எச்சரித்தார். வ.உ.சி.யும், சிவாவும் அஞ்சவில்லை. தூத்துக்குடி வியாபாரிகள் வெள்ளையருக்கு உணவுப் பொருட்களை விற்க மறுத்தனர். இலங்கையிலிருந்து ஆங்கிலேயர்களுக்கு உணவுப் பொருட்கள் வந்தது. மக்கள் ஆங்கிலேயரைக் கண்டால் சூழ்ந்து கொண்டு சுதந்திர முழக்கம் செய்தனர்.*

வெற்றி பெற்ற வேலை நிறுத்தம் 06.03.1908

கோரல்மில் தலைமை எழுத்தர் மில் ஆபீஸ் பிள்ளை என்ற சுப்பிரமணியபிள்ளை வ.உ.சி.யைச் சந்தித்து, தொழிலாளர்கள் கோரிக்கையை நிர்வாகம் ஏற்பதாக அறிவித்தார். ஊதியத்தை அதிகரிக்கவும், வேலை நேரத்தைக் குறைக்கவும், ஞாயிறு விடுமுறை அளிக்கவும் நிர்வாகம் ஒப்புக் கொண்டது.**

அன்று மாலை கடற்கரையில் சுப்பிரமணிய சிவா முழங்கினார்.

‘எனது நோக்கம் ஆணவத்தைக் குறைப்பதேயாகும். கூலிகள் ஒரு வாரம் சும்மா இருந்தார்கள். இப்போது நல்ல கூலி பெறப் போகிறார்கள். 50% உயர்வு சுதேசியத்தினால் கிடைத்துள்ளது. நாம் வெள்ளையர்களை எதிர்த்து நின்று வெற்றி

---

* I.M. Reisner, Social and Political contribution of Gangadhar Tilak, Tilak and the Struggle for Indian Freedom, Ed. I.M.Reisner and N.M.Goldberg, People's Publishing House, New Delhi, 1966, p. 646.

** The Hindu, 07.03.1908, 09.03.1908.

பெற்றுள்ளோம். இந்நாளானது எனக்கும் உங்களுக்கும் பெருமைக்குரிய நாளாகும்.'*

07.03.1908

கோரல்மில் தொழிலாளர்கள் 07.03.1908 நண்பகலில் வேலைக்குத் திரும்பினார்கள்.

சுயராஜ்ஜிய நாள்

சிறையிலிருந்து சுதந்திரப் போராட்டத் தலைவர் விபின் சந்திர பாலர் விடுதலையாகும் 09.03.1908-ஆம் நாளை சுயராஜ்ய நாளாகத் தூத்துக்குடியிலும், 14.03.1908-இல் திருநெல்வேலியில் கொண்டாட வ.உ.சி.யும், சிவாவும் முடிவெடுத்தனர். உடனே கலெக்டர் எல்.எம்.விஞ்ச் 144 தடை உத்திரவு பிறப்பித்தார். மேலும், வ.உ.சி.யும், சிவாவும், பத்மநாப அய்யங்காரும், தனது முன்னால் 09.03.1908-இல் ஆஜராகவும் ஆணை பிறப்பித்தார்.

08.03.1908

மார்ச் 9-ஆம் நாள் கூட்டத்திற்குத் தானே தடை; மார்ச் 8-இல் நடத்தினால் என்ன செய்வார் என்று வ.உ.சி.யும் சிவாவும் 08.03.1908-இல் தூத்துக்குடியில் கூட்டம் நடத்தினர். கூட்டத்தில் 4000 பேர் கலந்து கொண்டனர்.

பத்மநாப அய்யங்கார் – 09.03.1908

வ.உ.சி., சிவா, பத்மநாப அய்யங்கார் மூவரும் 09.03.1908 அன்று திருநெல்வேலியில் கலெக்டர் எல்.எம். விஞ்ச்சைச் சந்தித்தனர். தங்களது வழக்கினை உயர்நீதிமன்றத்திற்கு மாற்றிடவும் வேண்டினர். ஜாமீன் தொகை தரவும் மறுத்தனர். 10.03.1908 மாலையில் மீண்டும் மூவரும் நேரில் ஆஜராகுமாறு கலெக்டர் கூறினார்.

மகாகவி பாரதியார்

ஆங்கிலேயன் ஒரு தேசபக்தனுக்குக் கூறுவது, தேசபக்தன்

---

* ஆ.சிவசுப்பிரமணியன், வ.உ.சி.யும் முதல் தொழிலாளர் வேலை நிறுத்தமும் (1908), சென்னை, 1986, ப. 36.

ஆங்கிலேயனுக்குக் கூறும் மறுமொழி என்று **'சொந்த நாட்டிற் பரர்க்கடிமை செய்தே துஞ்சிடோம் - இனி அஞ்சிடோம்'** *என்ற பாடலை இச்சந்திப்பை வைத்துத்தான் மகாகவி பாரதியார் எழுதினார்.**

நெல்லையில் கூட்டம்

*14.03.1908-இல் திருநெல்வேலியில் நடைபெறவிருந்த விபின் சந்திர பாலர் விடுதலை நாள் கூட்டத்திற்கான மஞ்சள் கலரில் அச்சிடப்பட்ட நோட்டீசை, 14.03.1908 என்ற பகுதியினை 09.03.1908 என்று திருத்தி தாமிரபரணி ஆற்றங்கரையில் கூட்டம் நடப்பதாக விளம்பரம் செய்யப்பட்டது.***

திருநெல்வேலி தைப்பூச மண்டபத்தில்

09.03.1908 இரவு 9 மணிக்கு நெல்லை தாமிரபரணி ஆற்றுப் படுகையில் அமைந்துள்ள தைப்பூச மண்டபத்தில் விபின் சந்திர பாலரின் விடுதலை நாள் விழாக் கூட்டம் நடைபெற்றது. வ.உ.சி.யும் சிவாவும் கலந்து கொண்ட அந்தக் கூட்டத்தில் யாரும் எதிர்பாராத நிலையில் முதலில் வ.உ.சி. பேசினார்.

வ.உ.சி. முழக்கம்

"தூத்துக்குடியில் உள்ள ஆங்கிலேயர்கள் நாம் ஒன்றுபட்டு விட்டோம் என்று உணர்ந்து பயந்து கப்பல் தளத்தில் சென்று உறங்குகிறார்கள். அவர்களுக்கு பத்து பேர்களே போதுமானது. ஆனாலும் பலாத்காரத்தை உபயோகிக்கக் கூடாது. எந்த ஜாதியைச் சார்ந்திருக்கிறோம் என்று பார்க்க வேண்டியதில்லை.

---

* கலெக்டர் வின்ச் ஸ்ரீ சிதம்பரம் பிள்ளைக்குச் சொல்லுதல், கலெக்டர் வின்சுக்கு ஸ்ரீ சிதம்பரம் பிள்ளை சொல்லிய மறுமொழி, மகாகவி பாரதியார், இந்தியா, 04.04.1908, 1909 ஜன்மபூமி நூலிலும், 1919–இல் 'நாட்டுப் பாட்டு' என்ற பாரதி நூலிலும் இந்தப் பாடல் பதிப்பிக்கப்பட்டுள்ளது.

** செ.திவான், இந்திய விடுதலை இயக்க வரலாற்றில் தீவிரவாதம், மணியாச்சி கொலை, மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக எம்.ஃ.பில் பட்ட ஆய்வேடு, 1994, ப. 98 (இதனை நூலாக்கிட பொருள் வளத்தை இறைவன் தருவானாக)

இந்துவோ, முகமதியரோ (முஸ்லிமோ) கிறிஸ்தவரோ, புத்த மதத்தினரோ நாம் யாராக இருந்தாலும் நம்முடைய வேறுபாடுகளைக் களைந்து ஒன்றுபட்டு மேற்கூறியபடி தாமிரபரணி ஆற்றில் அந்நியப் பொருட்களையும் அந்நியர்களையும் பகிஷ்கரிக்க சத்தியப் பிரமாணம் எடுத்துக் கொள்ள வேண்டும்.”*

சிவாவின் சங்கநாதம்

இரத்தம் சிந்தாமல் எதையும் சாதிக்க இயலாது. ஜப்பான் 20000 வீரர்களைத் தியாகம் செய்து ரஷ்யாவை வெற்றி கொண்டது. அது போல் 15 கோடி இந்தியர்கள் உயிர்த் தியாகம் செய்தால் சுயராஜ்யம் கிடைத்துவிடும்.

இந்தியா இந்தியருக்கே – அந்நியருக்கு அல்ல

“அமெரிக்கா மற்றும் பிரிட்டிஷ் டொமினியன்களை உதாரணங் காட்டி போர்க்சுக்கல்லில் அரசரையும் இளவரசரையும் மக்கள் கொலை செய்ததைச் சுட்டிக்காட்டி அவ்வாறு செய்தது நியாயமே” என்று வாதிட்டவர் சிவா.

‘அடக்குமுறை கொடுமையைத் தாங்க முடியாத மக்கள் அவ்வாறு கொலைச் செயலில் இறங்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது’ என்று கூறிய சிவா, ‘இந்தியா இந்தியருக்கே அந்நியருக்கு அல்ல’ என்ற முழக்கத்துடன் தனது உரையை முடித்தார்.**

தூத்துக்குடி செல்லல்

1908 மார்ச் 9-ஆம் நாள் நெல்லையில் கூட்டத்தை முடித்துவிட்டு இரவோடு இரவாக தூத்துக்குடிக்குச் சென்றனர் (லாரி மூலம்) வ.உ.சி.யும், சிவாவும்.

10.03.1908

தூத்துக்குடியில் 10.03.1908 காலையில் விபின் சந்திர

---

* S.C.No. II of 1908, dated 7th July, 1908, Para 7, 11, நெல்லை செசன்ஸ் கோர்ட் வழக்கு எண் II/ 1908/ 07.07.1908, பாரா 7, 11.

** G.O.No. 1542, Judicial Department, dated 03.10.1911, pp. 13-14.

பாலரின் விடுதலை நாள் விழாவைச் சிறப்பாகக் கொண்டாடினர். அன்று அங்கிருந்து மதியம் ரயிலைப் பிடித்து மணியாச்சி வந்து அங்கிருந்து நெல்லை வந்து, குறிப்பிட்ட நேரத்தில் மாவட்ட கலெக்டர் விஞ்ச் முன்னால் வ.உ.சி., சிவா ஆஜரானார்கள். இவர்கள் மீது குற்றவியல் சட்டத்தின் 107-வது பிரிவின் கீழ் வழக்குத் தொடர்வதென கலெக்டர் முடிவு செய்தார்.

11.03.1908

திருநெல்வேலி மாவட்ட கலெக்டர் அலுவலகத்திற்கு எதிரே திரண்டிருந்த மக்களிடையே வ.உ.சி.யும், சிவாவும், பத்மநாப அய்யங்காரும், சுதேச எழுச்சி விடுதலை குறித்து பேசினார்கள்.

12.03.1908 – பாளையங்கோட்டை மத்திய சிறை

கலெக்டர் விஞ்ச், வ.உ.சி.யையும் சிவாவையும் கைது செய்ய உத்தரவிட்டார். கைது செய்யப்பட்ட வ.உ.சியும், சிவாவும், நீதிமன்றத்திற்குக் கொண்டு செல்லப்படாமல் பாளையங்கோட்டை சிறையில் அடைக்கப்பட்டனர்.

13.03.1908

காலை 10.30 மணி திருநெல்வேலிப் பாலம் என்று அப்போது அழைக்கப்பட்ட வீரராகவபுரம் இரயில் நிலையத்தின் அருகில் உள்ள கடைகள் மூடப்பட்டன. மக்களின் நடமாட்டமும் போக்குவரத்தும் தடைபட்டது. மக்கள் எழுச்சி கொண்டனர்.

தூத்துக்குடியிலும் பேரெழுச்சி ஏற்பட்டது. கோரல் மில் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். தூத்துக்குடியில் கடைகள் அனைத்தும் மூடப்பட்டது.

தச்சநல்லூரிலும் மக்கள் எழுச்சி ஏற்பட்டது.

ஏட்டு குருநாத அய்யர்

ஏட்டு குருநாத அய்யர் நெல்லை - தச்சநல்லூர் பகுதியிலுள்ள கடைகளை அடைக்குமாறு

கட்டாயப்படுத்தினார். இவருக்கு ஏழு ஆண்டு நாடு கடத்தல் தண்டனை வழங்கப்பட்டது.

சாது கணபதி பந்துலு

நெல்லை சந்திப்பு சாது கணபதி பந்துலுவின் வீட்டில் சதியாலோசனைகள் நடந்ததாக அரசு ஆவணங்கள் குறிப்பிடுகிறது.

முகம்மது யாசின்

நெல்லை சி.எம்.எஸ். கல்லூரி தற்போதைய (சாப்டர் மேல்நிலைப் பள்ளி வளாகம்) புரட்சி வீரர்கள் புகுந்தனர். முகம்மது யாசின் நகர் மன்ற அலுவலகக் கட்டிடச் சுவர் இடிக்கப்பட்டது. ஆவணங்கள் கொளுத்தப்பட்டன. அஞ்சலகத்திற்கு தீயிடப்பட்டது. தந்திக் கம்பிகள் அறுக்கப்பட்டன. நகர்மன்ற மண்ணெண்ணெய் கிடங்கு தீ வைக்கப்பட்டது. நகரம் எங்கும் இருந்த விளக்குகள் உடைக்கப்பட்டன. துப்பாக்கிச் சூடு நடைபெற்றது. வண்ணார்பேட்டை ஆறுமுகம்பிள்ளை, முகம்மது யாசின் ஒடுக்கப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்த ஒருவர், ரொட்டிக் கடைக்காரர் ஒருவர் என நால்வர் களப்பலியாயினர்.

14.03.1908

கரூரிலும், திருனந்தபுரத்திலும் மக்கள் எழுச்சி கொண்டனர்.

லோகநாத அய்யர்

திருநெல்வேலி ம.தி.தா. இந்துக் கல்லூரி ஆசிரியர் லோகநாத அய்யர். இவர் நெல்லை எழுச்சியில் முக்கியப் பங்காற்றினார். இவருக்கு 5 ஆண்டு கடுங்காவல் தண்டனையும், 2000 ரூபாய் அபராதமும் விதிக்கப்பட்டது.* இவர் 1912 செப்டம்பர் 15-இல் விடுதலையானார்.**

---

* Madras Native Newspaper Reports, 1908.

** National Archives of India, Home Department, Political B, Nos. 1-8, October 1908a.

சங்கரநாராயண அய்யர்

வ.உ.சி. தனது சுய சரிதையில் குறிப்பிடும் சங்கர நாராயண அய்யர் நெல்லையில் சுதேசி வணிகர். இருவரும் கைது செய்யப்பட்டார். கண்ணனூர் சிறையில் அடைக்கப்பட்டார். கைதி எண் 3147.

சாவடி சிதம்பரம்பிள்ளை

*ஏ.கே.கனகசபாபதிப்பிள்ளை இராமசுப்பன் செட்டியார், பழநியாப்பிள்ளை, சாவடி சிதம்பரம்பிள்ளை (கைதி எண் 3376 கண்ணனூர் சிறை) சின்னத்தம்பி பிள்ளை, முத்து மூப்பனார், நெல்லையப்பபிள்ளை ஆழ்வாரப்பபிள்ளை, ஆண்டித் தேவர், முத்தையாத் தேவர், சேலம், கண்ணனூர், கோவைச் சிறையில் வாடியவர்கள். திருநெல்வேலி தீயிட்ட கேஸில் தண்டனை பெற்றவர்கள் ஆவர். திருநெல்வேலி எழுச்சியில் 53 பேர்களும், தூத்துக்குடியில் 36 பேர்களும் கைது செய்யப்பட்டனர். நெல்லையில் 37 பேர்கள் தண்டனை பெற்றார்கள். 27 பேர் சிறைத் தண்டனை பெற்றதாக ரௌலட் கமிட்டி அறிக்கை கூறுகிறது.**

20.03.1508

தூத்துக்குடி கோரல்மில் தொழிலாளர்கள் வேலைக்குத் திரும்பினர். அவர்களுக்கு 07.03.1908-க்கு முன் வழங்கிய ஊதியமே திரும்பவும் வழங்கப்பட்டது. வ.உ.சி., சிவா சிறையில் அடைக்கப்பட்டிருந்ததால், தொழிலாளர்களுக்கு வழங்கிய கூலி உயர்வைத் திரும்பப் பெற்றது நிர்வாகம்.

07.07.1908

திருநெல்வேலி மாவட்ட உதவி குற்றவியல் நீதிமன்றத்தில் நீதிபதி ஆர்தர் எஃப். பின்ஹே என்பவரால் வ.உ.சி., சிவா வழக்குகளில் தீர்ப்பளிக்கப்பட்டது.

வழக்கு எண் I

1908 ஆம் வருடத்திய செசன்ஸ் கோர்டு வழக்கு எண் 1இல்

---

* Sedition Committee Report, 1918, p. 163.

வ.உ.சி.க்கு ஆயுள் தண்டனையும், நாடு கடத்தலும், சுப்பிரமணிய சிவாவுக்கு 10 ஆண்டு தண்டனையும் நாடு கடத்தலும் என்று தீர்ப்பளிக்கப்பட்டது.

வழக்கு எண் II

வ.உ.சி. மீது தனியாக போடப்பட்ட வழக்கு எண் 2/1908 அதற்காக ஆயுள் தண்டனையும், நாடு கடத்தலும் தந்து நீதிபதி தீர்ப்பளித்தார்.

09.07.1908

பாளையங்கோட்டை சிறையிலிருந்து வ.உ.சி. கோயம்புத்தூர் சிறைக்கும், சிவா திருச்சி சிறைக்கும் கொண்டு செல்லப்பட்டனர்.

சீனிவாச அய்யங்கார்

வ.உ.சி.க்கும், சிவாவுக்கும் கொடுந் தண்டனை விதித்ததைக் கண்டித்து எழுதியதற்காக 'இந்தியா' பத்திரிகையின் ஆசிரியர் சீனிவாசஐயங்காருக்கு 5 ஆண்டு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

ஹரிசர்வோத்தமராவ்

*தெலுங்கு பத்திரிகை ஆசிரியர் ஹரிசர்வோத்தமராவிற்கு அதே காரணத்திற்காகக் கிருஷ்ணா ஜில்லா சென்ட்ரல் நீதிமன்றத்தில் 3 ஆண்டு கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது. கோவை சிறையில் அடைக்கப்பட்ட வ.உ.சி.யின் வாழ்க்கைச் சரித்திரத்தை அடியேன் பதிப்பித்த வ.உ.சி.யின் சுயசரிதையில் காணலாம்.**

திருச்சி சிறையில் சிவா

பாளையங்கோட்டை சிறையிலிருந்து கொண்டு செல்லப்பட்ட சிவா திருச்சி சிறையில் அடைக்கப்பட்டார். அவரது சிறைவாசம் குறித்து அவரே எழுதியுள்ள சிறைவாசம் என்ற நூல் இதோ . . .

---

* செ.திவான், பதிப்பு ஆசிரியர், வ.உ.சி. சுயசரிதை, சுகைனா பதிப்பகம், பாளையங்கோட்டை.

சிறைவாசம்

- சுப்பிரமணிய சிவா

பீடிகை

1908 ஆம் வருடம் ஜுலை மாதத்தில் ஜகன் மாதாவாம் மகாசக்தியின் ஆக்ஜையின் பிரகாரம் நான் செய்து வந்த தேசத் தொண்டு காரணமாக, அரசாங்க அதிகாரிகளால் ராஜத் துரோகக் குற்றம் சாட்டப்பட்டு, ஆறு வருட காலம் சிறைவாசம் அநுபவிக்கும்படி சேர்ந்தது என்பதை நேயர்கள் பலரும் அறிவார்கள்.

தேசத் தொண்டு செய்வதின் காரணமாக சிறைவாசம் அநுபவிக்கும்படி நேரிடும் எனது மற்ற சகோதரர்கள் சிறைச்சாலையின் இன்பங்களையும் துன்பங்களையும் நன்றாக முன்கூட்டியே அறிந்து அதற்குத் தம்மைத் தயாராக்கிக் கொள்ளும் பொருட்டும் பிறரும் இந்திய சிறைச்சாலை இப்படி இருக்கிறதென்று தெரிந்து கொள்ளும் பொருட்டும், எனது சிறைச்சாலை அநுபவங்களை ஒரு பெரிய புத்தக ரூபமாக வெளியிடலாமென்று நெடு நாட்களாகக் கருதியுள்ளேனாயினும், பல காரணங்களால் இதுகாறும் அப்படி செய்ய முடியவில்லை.

இப்பொழுது ரௌலட் சட்டம் சம்பந்தமாக மகாத்மா காந்தியவர்களின் தலைமையின் கீழ் சத்தியாக்கிரக முயற்சி இந்தியாவிலெங்கும் மும்முரமாகப் பரவுவதற்குள்ள அறிகுறிகள் தோன்றியிருப்பதினாலும் இதனால் பல நண்பர்கள் சிறைவாசம் செய்யும்படி நேரிடலாமாதலாலும், இத்தருணத்திலே இது போன்ற புத்தகம் தமிழ்நாட்டினருக்கு மிகவும் உபயோகமாயிருக்கும் என்று இச் சிறு புத்தகம் வெளியிடலாயினேன்.

கூடிய சீக்கிரத்தில் எனது சிறைச்சாலை யனுபவங்கள் முழுவதையும் சேர்த்து ஒரு பெரும் புத்தகமாக வெளியிடக் கருதியிருக்கிறேன்.*

---

* புத்தகம் வெளிவரவில்லை, செ.திவான்.

நாம் ஸ்வதந்திரத்தின்* பொருட்டு செய்யும் சத்தியாக்கிரகப் போரிலே, சாத்வீக யுத்தத்திலே, பலர் சிறைவாசம் செய்யும்படி நேர்வது ஜட திருஷ்டியில் விசனிக்கத் தக்கதேயாயினும், உலகிலே தேகாத்மவாத புத்தியிருந்து கொண்டிருக்கும் வரையில் இத்தகைய சம்பவங்கள் நிகழாமலிருக்க முடியாது. ஆதலால் நம் மாதாவாம் மகாசக்தி நமக்கு வரும் கஷ்டங்களை நாம் வெகு பொறுமையுடனும் அமைதியுடனும் சந்தோஷத்துடனும் அநுபவிப்பதற்குப் போதுமான சகல சக்தியையும் சாத்வீக தைரியத்தையும் அளிப்பாளாக. ஓம்! வந்தே மாதரம்.

எனது சிறைவாச நாட்கள்

1908 ஆம் வருஷம் ஜுலை 7ஆம் தேதியிலிருந்து 1912 ஆம் வருஷம் நவம்பர் மாதம் 2-ஆம் தேதி வரையில் நான் திருச்சினாப்பள்ளி சிறைச்சாலையிலும் சேலம் சிறைச்சாலையிலுமாக அடைபட்டுக் கிடந்தேன். இன்ப துன்பங்கள் மனிதனுடைய வாழ்க்கையில் கலந்திருத்தல் போல, எனது சிறைவாசத்திலும் இன்ப துன்பங்கள் கலந்து கிடந்தன. மிக மிக கஷ்டமான வேலைகளும் செய்தேன். சுகமாகவும் கொஞ்ச காலம் வைக்கப்பட்டிருந்தேன்.

என்னைத் தண்டித்த மறுநாளுக்கடுத்த நாள் 9-ஆம் தேதி என்னை திருநெல்வேலி சிறைச் சாலையிலிருந்து திருச்சினாப்பள்ளி சிறைச்சாலைக்கு அனுப்பி விட்டார்கள். எனக்கு விதித்தது கடுங்காவல் தண்டனையல்லவா? ஆதலால், அடுத்த நாள் 10-ஆம் தேதி முதல் எனக்கு வேலை கொடுக்கப்பட்டது.

முதலில் என்னை கம்பளிச் சரடு நூற்கும் வேலையில் போட்டார்கள்; இது அவ்வளவு கடுமையான வேலையன்று. சுமார் பத்து நாட்களுக்குப் பின், திடீரென்று என்னை கேழ்வரகு அரைக்கும் வேலையிலே போட்டார்கள். இதற்குக் காரணம் இன்னும் எனக்குச் சரியாக விளங்கவில்லை.

---

* ஸ்வதந்திரம் – சுதந்திரம்,

ஆனால், நான் அந்த சிறைச்சாலைக்குப் போன புதிதில் 40, 50 பெயர்களைச் சேர்த்து அடைக்கும் பெரிய கொட்டறையில் அடைக்கப்பட்டிருந்த யான் அந்த சுமார் 10 நாட்களுக்குப் பின் மற்றவர்களினின்றும் பிரிக்கப்பட்டு தனிக் கொட்டறையில் அடைக்கப்பட்டதையும் பின்னர் இரண்டு மூன்று நாட்களுக்குள்ளே அச் சிறைச்சாலையில் சில கைதிகளை கால் விலங்குகள் போட்டு, சிறைச்சாலைக்கு வெளியே கொண்டு போய், 'கோரண்டீன்' கொட்டறையில் தனித்து அடைத்து வைத்ததையும் என்னை கடினமான வேலைக்கு அனுப்பினதையும் சேர்த்து ஊகித்துப் பார்த்தால், சில கைதிகள் ஏதோ கலகம் செய்ய விரும்பினார்கள் போலவும் அதற்கு அதிகாரிகள் நானே காரணமென்று ஊகித்தார்களென்றும் தோன்றுகிறது.

இரண்டு மூன்று நாட்கள் தான் இந்த வேலை செய்தேன். அதிகாரிகளுக்கு என் மீது அதிக தயவு உண்டாய் விட்டது! இதனினும் கடுமையான, சிறைச்சாலைத் தொழில்களுக்குள்ளே மிக மிகக் கடுமையான, கம்பிளி ரோமமடிக்கும் தொழிலில் என்னைப் போட்டார்கள். மெத்தை தலையணைகட்கு பருத்தியை வில் பிடித்து பஞ்சாக அடிப்பது போல, கத்தை கத்தையாகச் சுண்ணாம்பில் தோய்த்துக் காய்ந்து வரும் கம்பிளி ரோமத்தை வில் பிடித்து அடித்துச் சன்னமாக்க வேண்டிய இத்தொழில் எத்தகைய பலத்த சரீரக் கட்டுடையவனுடைய சுகத்தையும் பாதிக்க வல்லது.

இந்தத் தொழிலில் சுமார் ஒரு வாரம் இருந்தேனென்று நினைக்கிறேன். இதற்குள்ளாக எனக்கு இருமல் உண்டாய்விட்டது. ஆஸ்பத்திரிக்கு சிகிச்சைக்கு அனுப்பப்பட்டேன்.

என்னை ஆஸ்பத்திரியிலிருந்து வேலைக்கு அனுப்பிய பொழுது, பிரதம வைத்தியர் (The Medical Officer) எனக்கு வேலை கொடுக்கும்படி சிபாரிசு செய்தார்.

என்னை கம்பிளி நெய்யும் தொழிலிலே போட்டார்கள். மறுநாள் எனது கடுங்காவல் தண்டனையை நிறுத்தி வைத்து என்னை வெறுங் காவற் கைதி போல பாவிக்கும்படி சென்னை உயர்தர நீதி ஸ்தலத்திலிருந்து உத்தரவு வந்தது. நான்கு மாத காலம் வெறுங் காவலில் கழித்தேன்.

மறுபடியும் கடுங்காவல் தண்டனையை ஏற்றுக் கொண்டேன். என்னை துணி நெய்யும் தொழிலில் போட்டார்கள். அங்கிருந்து சேலம் சிறைச்சாலைக்கு மாற்றப்படுகிற வரையில் இந்த தொழிலிலேதான் இருந்தேன்.

பின்னர் சேலத்திற்கு மாற்றப்பட்டேன். அங்கு என்னை இப்பொழுது பீடித்து வருத்தும் வியாதி அப்பொழுதுதான் ஆரம்ப ஸ்திதியிலிருந்ததாயினும் எனக்கு ஒரு சிறிது உதவியாகவேயிருந்தது. எனக்குக் கடுமையான வேலைகள் கொடுக்கப்படவில்லை. தவிர, அப்பொழுது அவ்விடத்தில் தலைமையதிகாரியாயிருந்தவரும் மிக மிக நல்லவர், இயேசுநாதரிடத்தில் உண்மைப் பக்தி மிகுந்தவர்; நன்றாக விஷயங்களைப் படித்துத் தெரிந்து கொண்டார். அவர் என் மீது சிறிது பக்ஷம் பாராட்டி, இன்ஸ்பெக்டர் ஜெனரலுக்கு சிபார்சை செய்து, நான் எழுதுவதற்கு எழுது கருவிகளும் காகிதமும் புத்தகங்களும் வைத்துக் கொள்ளும்படிக்கும் மற்றும் சௌகரியங்கள் செய்து கொடுத்தார்.

அப்பொழுது நான் எழுதின புத்தகங்கள் மூன்று வெளிவந்திருக்கின்றன. அவையாவன: 1. சச்சிதானந்த சிவம், 2. ஞானரத்தினம், 3. பகவத் கீதா சங்கிரகம்.

எனக்கு நான் செய்து வந்த வேலைக்கும் எனது நன்னடத்தைக்கும் ஜ்யார்ஜ் சக்கரவர்த்தியவர்களுடைய மகுடாபிஷேக கொண்டாட்டத்துக்காகவும் தள்ளுபடியாக சுமார் ஒரு வருடம் எட்டு மாதம் தள்ளிக் கொடுக்கப்பட்டன. மிகுதி நான்கு வருஷங்களும் நான்கு மாதங்களும் சிறைச்சாலையிலே கழித்துவிட்டு இதோ மறுபடியும், எனது தேச ஜனங்களாகிய உங்களுக்கு ஊழியஞ் செய்யும் பொருட்டு உங்கள் முன்னே வந்து நிற்கிறேன்.

கைதி சின்னங்கள்

சகோதர, சத்தியாக்கிரகப் போரிலே சேர்ந்திருக்கிறாயா? அல்லது ஆதரிக்கிறாயா? அல்லது இப்போரிலே வீரர்களாய் முன் வந்து நிற்பவர்களிடம் அனுதாபமாவது காட்டுகிறாயா? இப்பொழுது நீ எவ்விதத்திலும் இந்த யுத்தத்திலே சேரா விட்டாலும், நீ எனது சகோதரனாயிருக்கிறபடியினாலே, நீ சாத்வீக சம்பந்நர்களான மகரிஷிகளின் சந்ததியில் வந்தவனாயிருக்கிறபடியினாலே, நீ எப்பொழுதாவது சேரத்தான் வேண்டிவரும். ஆதலால் நீயும் பல கஷ்டங்களை அனுபவிக்கும்படி நேரிடும். கஷ்டங்களை யநுபவிக்காவிட்டாலும், பிறவி யுரிமைகட்காகப் போராடி அதனாலே கஷ்டமுறும் உனது சகோதரர்களிடத்திலே நீ அநுதபிக்காமலிருக்க முடியாது. ஆதலால் சிறைச்சாலைக்குள்ளே நடக்கும் விதிகளையும் விஷயங்களையும் நீ அறிந்து கொள்ளுதல் நன்றே.

சகோதர, நீ சத்தியாக்கிரகப் போரிலே அடிபட்டுச் சிறைபுகும் படியான பாக்கியம் உனக்குக் கிடைப்பதாக வைத்துக் கொள். நீ தண்டிக்கப்பட்டுச் சிறைச்சாலையினுள்ளே நுழைந்தவுடன், உனக்குச் சொந்தமாக நீ தரித்திருந்த ஆடையாபரணங்களையும் மற்றும் சிறைச்சாலையதிகாரிகள் வாங்கிக் கொண்டு விடுவார்கள்.

உனக்கு அவர்கள் கைதியுடை கொடுப்பார்கள். முழங்கை வரையில்கூட சரியாக வராமல், இடுப்பு வரையிலேயே நிற்கும் ஒரு மேலங்கி; இதை கழுத்து வழியாக போட்டுக் கொள்ள வேண்டும். முழங்கால் வரையில்கூட வராத ஒரு காலங்கி, தலைக்கு ஒரு குல்லாய், ஒரு கௌபீனம்* இவை கைதி யொவ்வொருவருக்கும் முறையே இரண்டு ஜதை கொடுக்கப்படும். அதிலே ஒன்று புதியதும், மற்றது பழையதுமாம். இந்த உடையிலே ஒரு விசேஷம், குறுக்கு நெடுக்குமாகக் கறுப்புக் கோடுகள் போட்டு, வெகு விநோதகரமாய், வேஷம் போட்டது போலிருக்கும்.

---

* கௌபீனம் – கீழுடை, கோவணம்.

கழுத்துக் கட்டையென்று ஒன்றை கயிற்றிலே கோர்த்துக் கழுத்திலே கட்டித் தொங்க விடுவார்கள். அதிலே கைதி நெம்பர், தண்டனை, விடுதலை, வருஷம், மாதம், தேதி இவை பதிப்பிக்கப்பட்டிருக்கும். ஒரு வருஷத்துக்குட்பட்ட தண்டனையுள்ள கைதிகளுக்கு மரத்தினால் சிறு சிறு பில்லைகள் வெட்டி, கழுத்துக் கட்டைகளாகக் கொடுக்கப்படும். ஒரு வருஷத்துக்கு மேல்பட்ட தண்டனையடைந்த கைதிகளுக்கு தகரத்தினாலே பில்லைகள் கத்தரித்துக் கொடுக்கப்படும்.

இன்னும் கைதியின் வலது கணுக்காலில் காப்புப் போன்ற வளையம் ஒன்று போட்டு விடுவார்கள். சரித்திர அட்டையென்று ஒன்று கையிலே கொடுப்பார்கள். இதிலே கைதி தண்டனையானது முதல் விடுதலையாகும் வரையில் அவனுடைய சம்பந்தமாக நடைபெறும் சகல விஷயங்களையும் குறித்து வைப்பார்கள். அதாவது அவன் தண்டனையடைந்த சட்டப் பிரிவு, தண்டனையடைந்த வருஷம், மாதம், தேதி, விடுதலையடையும் வருஷம், மாதம், தேதி, அவன் கடிதம் எழுதினால் அந்த விஷயம். அவனை எவராது பந்துக்களோ நண்பர்களோ வந்து கண்டு பேசினால் அந்த விஷயம் அவனுக்குக் கொடுக்கப்படுகின்ற வேலை முதலிய, அவன் சம்பந்தப்பட்ட சகலமும் அதிலே பதிப்பிக்கப்படும்.

தவிர, ஒவ்வொரு கைதிக்கும் இரண்டு கம்பிளிகளும் ஒரு கயிற்றுப் பாயும் படுக்கையாகக் கொடுக்கப்படுகின்றன.

கைதிக்கு வேலை கொடுக்கப்படுவதற்கு முன்னால் கைதியினுடைய சரீரத்தை சிறைச்சாலை வைத்தியர்கள் பரிசோதனை செய்து, இவன் இன்ன வேலைக்குத்தான் தகுந்தவன் என்று குறிப்பிட வேண்டும்.

வேலை மூன்று விதமாக அமைக்கப்பட்டுள்ளது. 1) கடினமான வேலை, 2) மத்திய தர வேலை, 3) லேசான வேலை, கேழ்வரகு அரைத்தல், கம்பிளி ரோமம் அடித்தல் முதலியவெல்லாம் கடினமான வேலையாம். நெசவு, தையல், கம்பிளிச் சரடு நூற்றல் முதலியனவற்றிலெல்லாம் மத்திய தர

வேலையாம். கம்பிளியோரங்களை முடி போடுதல் போன்ற வேலைகயெல்லாம் லேசான வேலைகளாம்.

வைத்தியர் கைதியினுடைய சரீரத்தைப் பரிசோதனை செய்து, லேசான வேலைக்கு சிபார்சை செய்து விட்டால், சிறைச்சாலை அதிகாரிகள் கடினமான வேலை கொடுக்க முடியாது.

ஒவ்வொரு வேலையிலும் இவ்வளவு செய்து தீர வேண்டுமென்று கணக்குண்டு. உதாரணமாக ஒரு நாளைக்கு எட்டு கஜம் கைதி சட்டைத் துணி நெய்ய வேண்டுமென்று ஒரு கணக்கு அப்பொழுது திருச்சினாப்பள்ளி சிறைச் சாலையில் இருந்தது. அப்படித்தான் நான் நெய்து கொடுத்தேன். கேழ்வரகு ஒரு கோணி மூட்டையை இருவராக நின்று கொண்டு எந்திரத்தில் அரைத்துத் தீர வேண்டும். இம் மாதிரியே ஒவ்வொன்றுக்கும் கணக்கு உண்டு.

வேலைக்குப் போட்ட புதிதிலே இரண்டு மூன்று நாட்களுக்கு அவ்வளவு கண்டிப்பாகக் கணக்குக் கேட்க மாட்டார்கள். ஆனால் அதற்குள்ளே கைதி இட்ட வேலையைக் கற்றுக் கொண்டுவிட வேண்டும். இல்லையேல், கணக்கில், குறைந்த வேலை செய்வதற்காக, பல வித தண்டனைகள் கொடுக்கப்படும்.

க்ஷவரம்

கைதி சிறைச்சாலைக்குள் சென்றவுடன் முழு மொட்டையாக க்ஷவரம் செய்து கொண்டுவிட வேண்டும். ஆனால் மேல் கோர்ட்டிலே அப்பீல் நடப்பதாயிருந்தால் அப்பீல் முடிவு காலம் வரையில், அவன் க்ஷவரம் செய்து கொள்ள வேண்டிய அவசியமில்லை.

சாதாரணமாக, கைதியின் சரீரத்தின் எந்தப் பாகத்திலும் அரையங்குலத்துக்கு மேல் நீளமுள்ளதாக ரோமம் வளரவிடக் கூடாது என்பது வைத்திய விதியாக வைக்கப்பட்டிருக்கிறது. ரோமம் அதிகமாக வளர்ந்து விட்டால், அழுக்குப் படிந்து சேர்ந்து குவிந்து சரீரத்திலே வியாதியை உண்டு பண்ணி

விடுமாம். இந்த விதியை ஆதாரமாகக் கொண்டு சில அதிகாரிகள் கைதிகளுடைய மீசைகளையும் கத்தரிப்பது வழக்கம்.

க்ஷவரம் செய்வதற்கு அங்கு உபயோகிக்கப்படும் கத்திகளோ சொல்ல வேண்டியதில்லை. வெறும் இரும்புத் தகடுகள். சாணையென்றால் இன்னதென்றே அவற்றிற்குத் தெரியாது.

என்னைப் போன்று முரட்டு ரோமங்கள் உள்ளவர்கள் இந்த க்ஷவரத் தினத்தன்று படுகிற கஷ்டம் இவ்வளவென்று சொல்லி முடியாது. எந்த வேலையும் செய்யலாம். எந்தக் கடினமான விதிகளுக்கும் உட்பட்டிருக்கலாம். மரண வேதனையும் அனுபவிக்கலாம். ஆனால் இந்த க்ஷவர வேதனை மாத்திரம் எத்தகையோராலும் பொறுக் கொணாததாம். நான் எனது சிறைவாசத்தை தவ வாழ்க்கையாகவே கொண்டிருந்தேன். ஆயினும் ஞாயிற்றுக்கிழமை தினம் வந்துவிடும். க்ஷவரம் செய்வதற்குப் பரிகாரிகள் வந்துவிடுவார்கள். என்னுடைய சரிரமெல்லாம் நடுங்கும். அன்று நான் க்ஷவரம் செய்து கொள்வதற்குள்ளாக எனது உயிர் எண்ணற்ற தடவை எமனுலகேகி வரும்.

க்ஷவரர்கள் யார் தெரியுமா? அம்பட்ட ஜாதியாரில் தண்டனையடைந்தவர்கள் எவரேனும் இருந்தால் அவர்களும் இருப்பார்கள். ஆனால், அவர்கள் எத்தனை பெயர் இருப்பார்கள்? ஆதலால் பறையர்களும், சக்கிலியர்களும் ஒட்டர்களும் இந்த வேலைக்கு நியமிக்கப்படுகிறார்கள்.

ஆ! ஆ! க்ஷவரமென்று ஒன்று இல்லாவிட்டால், சிறைவாசத்தைப் போல் சுகவாசம் இல்லவேயில்லையென்று சொல்வேன். ஞாயிற்றுக்கிழமைய தினம் ஒவ்வொரு கைதியும் கட்டாயம் க்ஷவரம் செய்து கொண்டு தீர வேண்டும். தவறக் கூடாது.

ஆகாரம்

நான் சிறைவாசம் செய்த பொழுது, கேழ்வரகே

அனைவருக்கும் ஆகாரமாயிருந்தது. காலையில் ஏழு மணிக்குள்ளாக கேழ்வரகுக் கஞ்சி; மத்தியானம் பதினோரு மணிக்கு கேழ்வரகுக் களி; மாலையில் 5 மணிக்குக் கேழ்வரகுக் களி.

காலைக் கஞ்சிக்கு ஒரு சட்டினியும், மற்றிரண்டு வேலை ஆகாரத்துக்கு உப்பு உரப்பு இல்லாத ஒரு குழம்பும் அளிக்கப்படும்.

அக்காலத்திலே ஞாயிற்றுக்கிழமை, புதன் கிழமைகளில், அனைவருக்கும் சோறு கொடுக்கப்பட்டு வந்தது; புதன்கிழமையன்று மாம்ச போஜனம் செய்பவர்கட்கு மாமிசமும் மற்றவர்கட்கு நல்லெண்ணெயும் கொடுத்து வந்தார்கள். இப்பொழுது இவையெல்லாம் எப்படியோ எனக்குத் தெரியாது.

ஆனால் ஸ்ரீமான் பி.கேசவ பிள்ளையவர்கள் செய்த பெரு முயற்சியின் பலனாக, வெளியிலே சோறு சாப்பிட்டு வந்தவர்களுக்குச் சிறைச்சாலையினுள்ளும் சோறுதான் கொடுக்கப்பட வேண்டுமென்று ஒரு விதி ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. ஆகையினால் இப்பொழுது மூன்று வேளையும் பெரும்பான்மையோருக்கும் அரிசியாகாரமே; காலையில் அரிசிக் கஞ்சியும், மற்றிரண்டு வேளைகளில் சோறுமாம். ஆனால் ஆகாரமானது அளந்து கொடுக்கப்படுகிறது என்பது ஞாபகமிருக்க வேண்டும்.

தென்னாட்டு சிறைச்சாலைகளுக்கு முக்கியக் காய்கறியாயுள்ளது முள்ளங்கிக் கிழங்காம். சிறைச்சாலைத் தோட்டங்களிலே பல வித காய்கறிகளும் சீமைக் காய்கறிகளும் விளைவிக்கப்படுகின்றனவாயினும் அவை ஜயிலதிகாரிகளிற் சிலருடைய வீடுகட்கும் ஊர்ப்புறத்துச் சந்தைகளிலே விலைக்கும் அனுப்பப்படுகின்றன. பெரும்பான்மையும் முள்ளங்கிதான் கைதிகள் கண்டது.

மற்ற காய்கள் என்றேனும் அபூர்வமாக உபயோகிக்கப்பட்டு விட்டால், அன்று கைதிகளுக்கு ஒரு

திருவிழாப் போல; ஆனால் வைத்தியர் கொஞ்சம் கைதிகளிடத்திலே பக்ஷமும்* கவலையும் கொள்வாரானால், கைதிகளுக்கு வாய்க்கு ருசியான ஆகாரம் கிடைக்கலாம்.

சிறைச்சாலை தண்டனைகள்

சிறைச்சாலையிலே, எடுத்ததெல்லாம் குற்றம் தான். எச்சில் தெரியாமல் கீழே துப்பிவிட்டால், அதுவும் ஒரு குற்றமே. ஒரு இடத்தில் ஒரு அழுக்கு இல்லாமல் சுத்தமான இடம் பார்க்க வேண்டுமென்றால், சிறைச்சாலை யொன்றேதான் அத்தகைய இடம்.

சிறைச் சாலையிலே பலவித தண்டனைகள் உண்டு. கணக்குக்குக் குறைவாக வேலை செய்தல், வேலையே செய்ய மறுத்தல், வைத்துக் கொள்ளக் கூடாத வஸ்துக்களை வைத்துக் கொண்டிருத்தல், அதிகாரிகளை எதிர்த்துப் பேசுதல், அவமதித்தல், கலகம் செய்தல் முதலிய பல குற்றங்களுக்கு, குற்றங்களின் அளவுக்குத் தக்கவாறும், ஜெயில் சூப்பிரெண்டெண்டினுடைய இஷ்டப்படிக்கும் தண்டனைகள் விதிக்கப்படும்.

தண்டனைகள் பல விதமாம். 1) வேலைக்காகவும் நன்னடத்தைக்காகவும் கொடுக்கப்படும் வஜா நாட்களில் சில நாட்களை யபராதமாகப் பிடித்துக் கொள்ளுதல், 2) சங்கிலி விலங்கு இரண்டு கால்களுக்குமாக மாட்டி விடுதல், 3) அடி தண்டா விலங்கு, கடப்பாறை போன்ற இரண்டு கெட்டியிரும்புக் கம்பிகளை சங்கிலி விலங்கு போல நீட்டிவிட்டு கால்களில் மாட்டி விடுதல், 4) குறுக்கு விலங்கு. இது கட்டப் பாறை போன்ற ஒரு கெட்டி இரும்புக் கம்பியை இரண்டு கால்களுக்குமிடையே குறுக்கே கொடுத்து மாட்டி விடுதல், 5) கஞ்சிப்படி, மூன்று நாட்களுக்கு மேற்படாமல் வெறுங் கஞ்சியையே ஆகாரமாகக் கொடுத்தல், 6) தனிக் கொட்டறை, தனியே கொண்டு போய் அடைத்து, கொட்டறைக்குள்ளேயே வேலை கொடுத்தல்,

---

* பக்ஷம் – உருக்கம், அன்பு.

7)இருட்டுக் கொட்டறை, முன்னே இக் கொட்டறை இருட்டாயிருந்தது போலும். ஆனால் இப்பொழுது தனிக் கொட்டறைக்கும் இதற்கும் வித்தியாசமில்லை. 8) நிறுத்தி வைத்துக் கைவிலங்கு. கைதியை நிறுத்தி வைத்து இரண்டு கைகளையும் ஒரு கம்பியிலே சேர்த்து விலங்கு பூட்டி விடுவது, 9) கடைசியாகக் கசையடி, முக்கோணத்திலே கட்டி, முப்பது அடிக்கு மேல் படாமல் அடித்தல்.

கஞ்சிப்படி போடுவது, இருட்டுக் கொட்டறையில் அடைப்பது, கசையடி அடிப்பது, இவற்றுக்கு வைத்தியர் சரீரத்தைப் பரிசோதனை செய்து பார்த்து, தகுந்த உத்தரவளிக்க வேண்டும். கசையடியடிக்கும் பொழுது வைத்தியர் பக்கத்திலே நிற்க வேண்டும்.

ஜயிலதிகாரிகள்

ஒவ்வொரு ஜயிலுக்கும் ஒரு சூப்பிரண்டெண்ட், ஒரு ஜயிலர், ஒரு டிப்டி ஜயிலர், ஒரு ஸ்டோர் கீப்பர், ஒரு சீப் வார்டர், சில ஹெட் வார்டர்கள், சில வார்டர்கள், இத்தனை பெயர்களும் இருப்பார்கள். வேலை கொடுப்பது, தண்டனையளிப்பது முதலிய சகல அதிகாரமும் சூப்பிரெண்டெண்டுக்கே சேர்ந்தது; கைதிகளை யொழுங்காகப் பார்த்துக் கொள்வது, வேலை வாங்குவது முதலியனவே ஜயிலர், டிப்டி ஜயிலர் இவர்களுடைய கடமைகளாம். ஒவ்வொரு வேலை ஸ்தலமும் ஒரு வார்டருடையவோ அல்லது ஹெட் வார்டருடையவோ நிர்வாகத்தில் இருக்கும்.

கைதிகளுக்குள்ளே உத்தியோகஸ்தர்கள் நியமிக்கப்படுகிறார்கள். வருஷக்கணக்காக தண்டனையடைந்த கைதிகள் சில வருஷங்கள் சரி வர வேலை செய்து, நன் நடத்தையுடனும் இருந்து வந்தால் அவர்கள் கைதி மேஸ்திரிகளாக்கப்படுகிறார்கள்.

---

* யபராதம் – அபராதம்.

இந்த கைதி மேஸ்திரிகளுடைய கடமையென்ன வென்றால், கைதிகளிடமிருந்து வேலை வாங்குவது, அவர்கள் சண்டை சச்சரவுகள் போட்டுக் கொள்ளாமல் பார்த்துக் கொள்வது, அவர்களுக்கு ஆகாரத்தைச் சரியாகப் பங்கிட்டுக் கொடுப்பது, சுருக்கத்தில் கைதிகளை மேல் பார்ப்பது, இவையெல்லாமாம்.

ஓவர்சீயர்கள் என்று சில கைதி யுத்தியோகஸ்தர்கள் உண்டு. இவர்கள் மேஸ்திரிகள் செய்யும் கடமைகளையும் தவிர, இரவிலே கொட்டறைகளுக்குள்ளே பாராவும் கொடுக்க வேண்டும். இதற்கு மேல் கைதி வார்டர்கள் என்று சிலர் நியமிக்கப்படுகிறார்கள். இவர்களுக்கு வார்டர்களுக்கு போலவே கால் சட்டை, மேற்சட்டை, இடுப்பிலே கச்சை (பெல்ட்), தலைப்பாகை, செருப்பு, முழத்தடி (பேட்டன்) முதலியன கொடுக்கப்படுகின்றன. இவர்கள் செய்ய வேண்டி வேலையாவது, இரவும் பகலும் ஜயிலுக்குள்ளே கொட்டறைகளுக்கு வெளியே சுற்றிலும் பலயிடங்களிலும் நின்று கொண்டு பாராக் கொடுப்பதேயாம்.

மேஸ்திரிகளுக்கு வருஷம் ஒன்றுக்கு ஒன்றரை மாதம் தள்ளிக் கொடுக்கப்படுகிறது. அப்படியே ஓவர்சியர்களுக்கு வருஷத்துக்கு இரண்டு மாதங்களுக்குக் கைதி வார்டர்களுக்கு வருஷத்துக்கு மூன்று மாதங்களும் தள்ளிக் கொடுக்கப்படுகின்றன.

தவிர, மேஸ்திரிகள் மூன்று மாதங்களுக்கொரு முறை நண்பர்களையோ, பந்துக்களையோ கண்டு பேசவும், அவர்களுக்கு ஒரு கடிதம் எழுதவும் செய்யலாம். ஓவர்ஸியர்கள் இரண்டு மாதங்களுக்கொரு முறை அங்ஙனம் செய்யலாம். கைதி வார்டர்கள் ஒரு மாதத்திற்கொரு முறை யங்ஙனம் செய்யலாம். சாதாரண கைதிகள் ஆறு மாதங்களுக்கொரு முறைதான் பந்துக்களையோ நண்பர்களையோ கண்டு பேசவும் அவர்களுக்கு ஒரு கடிதம் எழுதவும் செய்யலாம்.

திங்கட்கிழமை பார்வை

ஒவ்வொரு திங்கட்கிழமையும் கைதிகள் அனைவரும் அதிகாலையில் கஞ்சியருந்தினவுடனே அவரவர்களுடைய கொட்டறைகளுக்கு வெளியே அணியணியாகத் தங்களுடைய படுக்கை, சட்டை முதலியவற்றை எதிரே வைத்துக் கொண்டு நிற்க வேண்டும். கழுத்துப் பட்டையும் காலை வளையமும் வெள்ளி போலப் பிரகாசிக்கும்படி தேய்த்து வைத்திருக்க வேண்டும். சட்டை முதலியன முந்தின நாளே தோய்க்கப்பட்டு சுத்தமாய் வெள்ளையாயிருக்க வேண்டும்.

டாக்டர், சூப்பிரெண்டெண்டு, ஜயிலர் இம் மூவரும் சேர்ந்து வரிசை வரிசையாகப் பார்வை பார்த்து வருவார்கள். கைதிகள் அன்றைய தினம் அச்சமயத்தில் நாங்கள் அதிகாரிகளிடம் சொல்லிக் கொள்ள வேண்டியவற்றை நன்றாகச் சொல்லிக் கொள்ளலாம். குறைகள் இருந்தால் நிவிர்த்தி செய்து கொடுக்குமாறு கேட்டுக் கொள்ளலாம். கடிதம் எழுத வேண்டியவர்கள் அன்றுதான் அதற்கு உத்தரவு பெற்றுக் கொள்ள வேண்டும்.

கூடா வஸ்துக்கள்

சிறைச் சாலையினுள்ளே கைதிகள் பணம் வைத்துக் கொள்ளலாகாது. பொடி, புகையிலை, சுருட்டு முதலிய லாகிரி வஸ்துக்களை உபயோகித்தலாகாது. காகிதம், எழுது கருவிகள் முதலியன வைத்திருக்கலாகாது. ஆனால் எங்கும் போல அங்கும் பணத்துக்குள்ள செல்வாக்கு அபரிமிதமாயிருக்கிறது.

திருட்டுத்தனமாக, சட்டத்துக்கு விரோதமாகக் கைதிகளுடைய வீடுகளிலிருந்து எத்தனை வார்டர்கள் பணம் வாங்கிக் கொண்டு வருகிறார்கள்? சிறைச் சாலையினுள்ளும் பணமிருந்தால் சுகமாக வசிக்கலாம்.

கைதிகளிடமிருந்து ஒரு கடிதம் வாங்கி, ஒரு வார்டர் அக்கடிதத்தில் குறிப்பிட்டிருப்பவரைப் பார்த்து பணம் வாங்கி

வந்தானானால், பாதி பணம் தானெடுத்துக் கொண்டு, பாதி பணத்தைத் தான் அந்தக் கைதியிடம் கொடுப்பான். வார்டரை திருப்தி செய்து, கஷ்டப்படாமல் இருப்பதற்கு வார்டருக்கு பணம் கொடுத்தாய்விட்டது. சிறைச்சாலையினுள்ளே இதர கைதிகளின் தயவும் வேண்டுமே. அதற்கு அவர்களுக்கு பொடி அல்லது புகையிலை வாங்கிக் கொடுக்க வேண்டும்.

பொடியினுடைய மகிமை தெரிய வேண்டுமானால், சிறைச்சாலையினுள்ளே பார்க்க வேண்டும். ஒரு சிட்டிகை பொடிக்கு கைதிதான் உண்கின்ற ஆகாரத்தைக்கூட கொடுத்து விடுவான். ஐயோ! அவர்கள் பொடி புகையில்லாமல் படுகிறபாடு சொல்லி முடியாது. பொடி புகையிலைக்காக செய்யாத வேலையெல்லாம் செய்வார்கள்.

இக்கூடாத வஸ்துக்களை உள்ளே கொண்டு வந்து கொடுத்ததற்காக எத்தனையோ சிப்பந்திகள் வேலையினின்றும் நீக்கப்பட்டும் தண்டிக்கப்பட்டும் இருந்தும், இன்னும் இவை நிற்கவில்லை.

தினசரி

தினந்தோறும் காலையில் மணி ஐந்தரைக்கெல்லாம் சிறைச்சாலையின் வாசலிலே டணார் டணாரென்று சேர்ந்தார் போல மணியடிப்பார்கள். பதினைந்து நிமிடங்களுக்கெல்லாம் மறுபடியும் மணியடிப்பார்கள். இதற்குள்ளாகக் கைதிகள் விழித்துக் கொண்டு, பாய்களையெல்லாம் சுருட்டி வைத்துவிட்டு, வெளியே வருவதற்கு தயாராகிவிட வேண்டும். மணி ஐந்தரைக்கு மூன்றாவது மணியடிப்பார்கள். அப்பொழுது ஜயிலர், டிப்டி ஜயிலர், வார்டர்கள் அனைவருமாக ஜயிலினுள்ளே நுழைந்து ஆங்காங்கு சென்று கொட்டறைகளையெல்லாம் திறந்து விடுவார்கள். கைதிகள் அவரவர்களுடைய கொட்டறைகளிலிருந்து வெளியே வந்து, நான்கு நான்கு பெயர்களாக வரிசையாக உட்கார வேண்டும். பின்னர் கைதிகளின் தொகை சரிதானா? என்று எண்ணி

பரிசோதிக்கப்படும். பின்னர் வார்டர் 'ரைஸ்' என்பான். எல்லோரும் எழுந்திருப்பார்கள். 'மார்ச்' என்பான். இவ்வுத்தரவுக்கு அவர்கள் மெல்ல போக வேண்டியதே நியாயமிருக்க, அப்பொழுது மாத்திரம் அவர்கள் ஒருவர் மேல் ஒருவர் விழுந்து ஓடுவார்கள்.

காரணம் என்ன தெரியுமா? இவர்கள் கக்கூசுக்கு ஓடுகிறார்கள். இவர்கள் நாற்பது, ஐம்பது பெயர்களுக்குக் குறையாமலிருப்பார்கள். கக்கூசிலே பத்து அல்லது பதினைந்து சட்டிகள்தான் போடப்பட்டிருக்கும். ஒருவர் பின் ஒருவராக மல விசர்ஜனம் செய்வதென்றால், அதற்கு நேரம் இராது. இதனால் நான் முன்னே, நீ முன்னேயென்று விழுந்தடித்துக் கொண்டு ஓடுவார்கள். ஒருவர் மல விஜர்சனம் செய்த சட்டியிலே, அந்த மலம் அப்புறப்படுத்தப்பட்டு, அந்த சட்டி சுத்தம் செய்யப்பட்டாலொழிய, எவரும் மல விசர்ஜனம் செய்யக் கூடாதென்பது சிறைச்சாலை விதியேயாயினும், இதை கவனிப்போர் இல்லவே இல்லை.

பெரிய கொட்டறைகளில் இரவில் சேர்ந்த மூத்திரத்தையும் மலத்தையும் எடுத்துக் கொண்டு போய் அப்புறப்படுத்துவதற்கு தோட்டிகள் உண்டு. ஆனால் தனிக் கொட்டறைகளிலே காரணத்துடனோ, காரணமில்லாமலோ அடைபட்டுக் கிடப்பவர்கள். இவர்கள் எந்த சாதியாராயினும் வெளியிலே எத்தகைய அந்தஸ்துள்ளவராயினும் தங்களுடைய மூத்திரச் சட்டிகளையும், மலச்சட்டிகளையும், தாங்களே கையில் எடுத்துக் கொண்டு போய் கக்கூசில் வைக்க வேண்டுமென்று அதிகாரிகள் வற்புறுத்துகின்ற இக்கொடிய வழக்கம் மிகவும் கெட்டது.

தனிக் கொட்டறையிலே, மல மூத்திர விசர்ஜனத்துக்கென்று மறைவான இடமில்லை. தலைமாட்டிலே மூத்திரச் சட்டியையும் மலச் சட்டியையும் வைத்துக் கொண்டு உறங்க வேண்டும். என்ன அநியாயம் இது. தனிக்கொட்டறையிலிருந்து மூத்திரத்தை அப்புறப்படுத்தா விட்டால் அது ஒரு பெருங்குற்றமாம்.

ஒரு கள்ள சாதிப் பையன் தனிக்கொட்டறையில் அடைக்கப்பட்டிருந்தான். இவன் எக்குற்றம் செய்தும் அங்கு அடைக்கப்படவில்லை. இவன் சிறு பையனாதலால், அஸ்வ பாவப் புணர்ச்சிக் குற்றங்கள் நடந்துவிடுமென்று இத்தகைய குற்றங்கள் சிறைச் சாலையில் நடைபெறுகின்றன. அதிகாரிகள் கருதி, இவனைத் தனியே அடைத்து வைத்தார்கள்.

இவன் தனது மல மூத்திரத்தை அப்புறப்படுத்த மறுத்து விட்டான். ஒரு நாளாயிற்று. இவனுக்கு அந்த கொட்டறைக்குள்ளே ஆகாரம் கொடுப்பார்கள். தினந்தோறும் மல மூத்திர விசர்ஜனத்துக்காக வெறும் சட்டிகள் மாத்திரம் உள்ளே கொடுக்கப்பட்டு வந்தன. மூன்று நாட்களாயின. மூன்று நாட்களாக அந்த கொட்டறைக்குள்ளே மலம் மூத்திரம் நிரம்பி, நாலா பக்கங்களிலும் துர்க்கந்தத்தை* வீசிக் கொண்டிருந்தது. இந்த குற்றத்துக்காக சில சிறிய ஜயிலதிகாரிகள் அவனைப் படுத்தினபாடு இவ்வளவென்று என்னால் உரைக்க முடியாது. இவர்கள் செய்த கொடூரங்களெல்லாம் சூப்பிரெண்டெண்டுக்கு மறுநாள் தெரிய வந்தும் அவர் அதைப் பற்றிக் கவனிக்கவேயில்லை. இது நிற்க.

பின்னர் அங்கேயே கல்லோ, மண்ணோ, சாம்பலோ, கரிக்கட்டையோ எது கையில் கிடைத்ததோ அதை எடுத்து கைதிகள் பல் துலக்குவார்கள். இதற்குள்ளாகக் கஞ்சி சாப்பிடுவதற்கு நேரமாய்விடும். வார்டர் ‘பைல்’ (File) என்று கூவி ஆக்ஞாபிப்பான்.** உடனே எல்லோரும் ஓடிச்சென்று நான்கு பேர் வரிசையாக உட்காருவார்கள். பின்னர் வார்டர் அவர்களைக் கஞ்சி சாப்பிடும் இடத்திற்கு நடத்திச் செல்வான். கஞ்சி சாப்பிட்டானதும் அவர்களை அணியணியாக நிறுத்தி நடத்திச் சென்று, ஓவர்சியர்களும் மேஸ்திரிகளும் கைதிகளை அவரவர்களுடைய வேலை ஸ்தலங்களுக்குக் கொண்டு போய்விடுவார்கள்.

---

* துர்க்கந்தம் – தீ நாற்றம்.

** ஆக்ஞாபிப்பான் – கட்டளை, ஆணையிடுவான்.

மணி பத்தரையானதும் வேலையினின்றும் ஒழிவு கிடைக்கும். பகற் போசன* முண்டுவிட்டு, மறுபடியும் பனிரெண்டு மணிக்கு வேலை தொடங்க வேண்டும். நாலரை மணி வரையில் வேலை.

பின்னர் கைதிகளெல்லோரும் குளிக்கச் செல்வார்கள். அவர்கள் ஸ்நானம் செய்யும் கோலத்தை என்னென்று சொல்வது. ஒரு தொட்டியிலே தண்ணீர் நிரப்பப்பட்டிருக்கும். 40, 50 பெயர்கள் சுற்றி நின்று கொள்வார்கள். சில சிறைச்சாலைகளிலே அவ்விடத்தில் ஒன்றிரண்டு தகரக் குவளைகள் போட்டுக் கிடக்கும். 40, 50 பெயர்களுக்கு ஒன்றிரண்டு தகரக் குவளைகள் எம்மாத்திரம்? தொட்டியண்டை குளித்துக் கொண்டு, கைதிகள் தங்கள் கையினால் தண்ணீரை வாரி வாரித் தலையிலும் சரீரத்திலும் தெளித்துக் கொள்வார்கள். நனைந்து பாதி, நனையாதது பாதியாக, ஸ்நானம்** ஆய்விடும். காக்கைகள், குருவிகள் கூட தங்களுக்குள்ள இயற்கைக் குணத்தினாலே நன்றாகச் சரீரத்தை நனைத்துக் கொள்ளும். ஐம்புலனும் அவயங்களும் அழகாயமையப் பெற்ற மனிதர்கள் பக்ஷிகளினும் கேடு கெட்டு, ஸ்நானம் செய்கிறார்கள். இன்னொரு விசேஷம். ஒரு ஐந்து நிமிஷங்கட்காவது நாம் கைதிகளெல்லோரும் அவதூதர்களாயிருப்பதைப் பார்க்கலாம். அவர்களுக்குக் குளித்தவுடன், ஈரத்தை துவட்டிக் கொள்வதற்குத் துண்டு கொடுக்கப்படுகிறதில்லை. அவர்கள் தங்கள் சட்டைகளினால் துடைத்துக் கொள்ள வேண்டும். சட்டை ஈரமாய் விடுமேயென்று பயந்து, பெரும்பான்மையோரும் தங்கள் தங்கள் கௌபீனங்களால் சரீரத்தைத் துடைத்துக் கொள்வார்கள். அப்பொழுது அவர்கள் நிர்வாணமாக இருப்பதைப் பார்த்தால், இரண்டு கால் மிருகங்களோ எண்ணும்படியிருக்கும். தவிர இந்த ஸ்நானமாவது ஐந்து நிமிஷத்துக்குள்ளே நடந்து தீர வேண்டும்.

---

* போசனம் – உணவு, சோறு.

** ஸ்நானம் – குளித்தல்.

உடனே மாலை சாப்பாடு. ஆ! ஆ! என்ன தடபுடல்! என்ன வேகம்! என்ன சுறுசுறுப்பு! என்ன ஓட்டம்! மாலைச் சாப்பாடானவுடனே, எல்லோரும் அவரவர்களுடைய கொட்டறைகளுக்கெதிரே போய் அணியணியாக உட்கார்ந்து கொள்ள வேண்டும். சரியாக மணி ஐந்தரைக்குக் கைதிகள் கணக்கை எண்ணி சரிபார்த்து கொட்டறைக்குள் பூட்டப்படும். இப்பொழுது பூட்டிவிட்டால், மறுபடியும் மறுநாட் காலையில் ஐந்தரை மணிக்குத்தான் கொட்டறைகள் திறக்கப்படலாம்.

ஆஸ்பத்திரி

ஒவ்வொரு சிறைச் சாலையிலும் ஒரு ஆஸ்பத்திரி கட்டாயமாக உண்டு. சிறைச் சாலையில் கைதிகளுடைய சுகத்தை கவனிப்பதற்காக இது ஏற்பட்டிருக்கிறது. தண்டனையான பின், கைதிகளுடைய சரீர சுகம் இந்த வைத்தியர்களின் கையில் ஒப்புவிக்கப்படுகிறது. சரீர சுகத்துக்கேற்றபடி ஆகாரங்கள் கொடுப்பதற்கு இந்த வைத்தியர்களுக்கு அதிகாரமுண்டு. இரண்டு வாரத்துக்கொரு முறை கைதிகள் நிறுத்துப் பார்க்கப்படுவார்கள். எடையிலே நான்கு ராத்தல் குறைந்து விட்டாலும், உடனே வைத்தியர் அந்த கைதியின் சரீரத்தைப் பரிசோதனை செய்து பார்த்து அவன் எடை குறையாமலிருப்பதற்கு வேண்டிய வழி செய்ய வேண்டும்.

பார்வையிடுபவர்கள்

சிறைச்சாலைக்கு வெளியிலேயிருந்து உத்தியோகஸ்தர்கள் ஆகவும், உத்தியோகஸ்தர்கள் அல்லாதவர்களாயும் உள்ள சிலருக்கு சிறைச்சாலைகளைப் பார்வையிட்டு, கைதிகளுடைய குற்றம் குறைகளைக் கேட்டு அவற்றை புத்தகத்திலே எழுதி வைத்துவிட்டுப் போகும்படியான ஒரு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அநேகமாக, ஜில்லா ஜட்ஜி, ஜில்லா மாஜிஸ்டிரேட், ஜில்லா போலீஸ் சூப்பிரெண்டெண்ட் இம்மூவரும், இவ்வதிகாரம் பெற்றவர்களாயிருப்பார்கள். தவிர,

வேறு இரண்டு பேர், ஊரிலே தகுந்த மனிதர்களாக, இவ்வதிகாரம் கொடுக்கப்பட்டிருப்பார்கள். இவர்கள் உண்மையானவர்களாயும் நல்லவர்களாயுமிருந்தால், கைதிகளுக்கு நன்மை உண்டாகலாம்.

சேலம் தேசாபிமானி ஸ்ரீமான் ஆதிநாராயண செட்டியாரவர்கள் சேலம் ஜில்லாவில் இவ்வதிகாரம் பெற்றிருந்தார். அப்பொழுது அவர் எனக்கு நியாயமான பல வழிகளாலும் பல நன்மைகள் செய்திருக்கிறார். ஆனால் இவர்கள் வந்து கைதிகளைப் பார்வையிட்டு அவர்களுடைய குற்றங் குறைகளை விசாரிக்கிற பொழுது, சிறைச்சாலை அதிகாரிகள் அவர்களுடன் கூடவே இருப்பார்கள். ஆகையினால் சாதாரணமாக, கைதிகள் தங்கள் குற்றங் குறைகளை தாராளமாகச் சொல்லிக் கொள்ள முடியாது.

உள்ளே நடக்கும் அக்கிரமங்களோ சொல்லி முடியாது. சிறைச் சாலைச் சுவர்களுக்கு வெளியே அவை வருவதில்லை. 10ரூ மாதச் சம்பளம் வாங்குகிற வார்டர் தான் ஒரு பெரிய சக்கரவர்த்தியென்றும், கைதிகள் தனக்கு அடிமையென்றும் நினைத்துக் கொள்கிறான். வார்டர் கைதிகளைக் கொண்டு தனக்குக் கை கால்களையும் பிடித்துவிடும்படி செய்கிறானென்றால், அவனுடைய அகங்காரத்தை என்னென்று சொல்வது! இவையெல்லாம் சட்ட விரோதமேயாயினும், கேட்பவர் எவர்? **கைதிகள் எவரிடத்தில் இக்குறைகளைச் சொல்வது? எவரிடத்திலேனும் சொல்லி விட்டால், மறுபடியும் அங்கிருந்து எப்படி பிழைப்பது?**

ராஜீயக் கைதிகள்

ராஜீய விஷயங்களில் தண்டிக்கப்படுகின்றவர்களும் சாதாரணக் கைதிகள் போலவேதான் நடத்தப்படுகிறார்கள். எவ்வித வித்தியாசமும் இல்லை. இன்னும் சொல்லப் போனால், **மற்ற கைதிகளைப் பார்க்கிலும் இவர்கள் அதிக கடூரமாகவே நடத்தப்படுகிறார்கள் என்றும் சொல்லலாம்.**

சிறைச் சாலையினுள்ளே கொஞ்சம் எழுதப் படிக்கத் தெரிந்த கைதிகளுக்குள்ளேயொரு நம்பிக்கையுண்டு. எழுதப் படிக்கத் தெரிந்தவர்களுக்குச் சிறைச்சாலையினுள்ளே கூட மதிப்பு உண்டு. அதிகாரிகள் எழுதப் படிக்கத் தெரிந்தவர்களைத் தங்களுக்கு 'ஆர்டர்லி'(Orderly)களாக எடுத்துக் கொண்டு விடுவார்கள். அதிக கஷ்டமில்லாமல் காலம் கழிக்கலாம்.

ராஜீயக் கைதிகளை 'ஆர்டர்லி'களாக ஒரு பொழுதும் எடுத்துக் கொள்ள மாட்டார்கள்; ஆபீசு ரகஸ்யங்களை எல்லாம் இவர்கள் அறிந்து கொண்டுவிட மாட்டார்களா? இன்னும் சாதாரணமாக, சூப்பிரெண்டெண்ட், ஜயிலர் முதலியவர்கள் ஐரோப்பியர்களாகவோ, சட்டைக்காரர் களாகவோ இருக்கிறதினாலேயே, ராஜீயக் கைதிகளை ஏதோ தங்கள் பாட்டனார் வீட்டுச் சொத்தை திருடிவிட்டு வந்தவர்கள் போலவும், அதனால் அவர்களிடமிருந்து சொந்த விரோதமுடையவர்கள் போலவும் கருதிக் கொண்டு, சட்டப்படிக்குக் கடுமையான வேலை கொடுத்து கண்டிப்பாக வேலை வாங்குகிறார்கள்.

பெரிய கொட்டறைகளில் அடைத்து வைக்கிறதில்லை. தனிக் கொட்டறையிலே தான், இவர்கள் பெரும்பான்மையும் அடைத்து வைக்கப்படுகிறார்கள்; ஏனெனில் இவர்கள் மற்ற கைதிகளுக்கும் தங்கள் மந்திரங்களை உபதேசம் செய்ய ஆரம்பித்து விடுவார்கள்.

மற்ற கைதிகளை சோதனை போடுவதைப் பார்க்கிலும், ராஜீயக் கைதிகளை அடிக்கடி, இரவிலேகூட பூட்டைத் திறந்து, சோதனை போடுவார்கள். திருச்சினாப்பள்ளி சிறைச்சாலையில் ஒரு தரம் சூப்பிரெண்டெண்டும் ஜயிலரும் சில வார்டர்களுமாகச் சேர்ந்து ஒரு நாள் இரவு பதினொரு மணிக்கு வந்து என்னுடைய கொட்டறையைத் திறந்து சோதனை போட்டார்கள்; திரும்பித் திரும்பி என்னைத் தான் பார்த்தார்களேயொழிய அவர்களுக்கு வேறொன்றும்

அகப்படவில்லை. ஏனெனில், ராஜீயக் கைதிகள் வெளியேயுள்ள தமது நண்பர்களுடன் கடிதப் போக்குவரவு செய்து, பணம் வரவழைத்துக் கொள்வார்களாம். வேண்டியன வரவழைத்துக் கொள்வார்களாம். ஆயுதங்கூட வரவழைத்துக் கொள்வார்களென்று அதிகாரிகள் சந்தேகப்படுவதுண்டு.

முடிவுரை

சகோதர, தென்னிந்தியா சிறைச் சாலையினுள்ளே நடைபெறும் விஷயங்களையும் விதிகளையும் எடுத்துரைத்து விட்டேன். இப்பரந்த உலகிலே தீமைகளில்லையா? கஷ்டங்களில்லையா? துன்பங்களில்லையா? அக்கிரமமில்லையா? பயமில்லையா? இது போலவே சிறைச் சாலையினுள்ளும் அவையிருக்கின்றன. ஆனால் சிறைக் களத்திலேயே ஸ்வதந்திரம் பிரகாசிக்கின்றது.

ராஜஸஸ்வதந்திர யுத்தத்திலே முன்னணியில் செல்பவர்கள் அடிபட்டு வீழ்ந்தால் அவர்களுக்கு வீரஸ்வர்க்கம் என்று எப்படி சாஸ்திரங்கள் கூறுகின்றனவோ, அப்படியே சத்தியாக்கிரகப் போரிலே, சாத்வீக ஸ்வதந்திர யுத்தத்திலே முன்னணியில் செல்பவர்கள் ஜோதி ஸ்வர்க்கமாகிற சிறைக்களம் அடைகிறார்கள்.

இவர்கள் அடையத்தான் வேண்டும். ஆகையால், சகோதர, நன்றாக ஆலோசனை செய்து பார். நம்மிடத்தில் தீய சிந்தனைகள் இல்லை. உலகில் எவரிடத்தும் நமக்கு விரோதமில்லை. நாம் சத்தியத்தை ஆதாரமாகக் கொண்டிருக்கிறோம். சத்தியத்துக்காகப் போராடுகிறோம். சிறைச்சாலையென்று மயங்காதே. சிறைச்சாலைகளை யெல்லாம் தவச் சாலைகளாக்கி விடுவோம்.

ஆகையால், சகோதர, சாத்வீக விரதம் பூண்டு கொள். இந்த சத்தியப் போராட்டத்திலே நம்மால் எவருக்கும் அணுவளவும் துன்பம் நேரிடாது. கஷ்டம் நேரிடாது. சத்தியாக்கிரகி சத்தியத்தின் பொருட்டு சகல கஷ்டங்களையும்

தான் ஏற்றுக் கொண்டு அனுபவிக்கிறானேயொழிய, பிறருக்கு எவ்வித கஷ்டமும் அளிப்பதில்லை. நம் முன்னோர்கள் காலத்திலே இந்நாட்டில் பிரகாசித்துக் கொண்டிருந்த தபோ சக்தி மறுபடியும் ஒளிர்ந்தது, ஓங்கப் போகின்றது. பாரத மாதாவின் முகம் குளிரப் போகின்றது.

நமக்கு எது நன்மையென்று ஈசுவரனுக்கு தெரியும். அவர் ஜீவகாருண்ய சொரூபியாகையினாலே நமக்கும் பிறருக்கும் நன்மையையே அளிப்பார். ஈசவரானுக் கிரகத்தினாலே தான் இப்பொழுது ராஜப் பிரதிநிதி சட்டசபையில் சட்டமாக்கப்பட்டிருக்கும் ரௌலட் சட்டம் வந்திருக்கிறது. இது வராவிட்டால் மகாத்மா காந்தி கிளம்புவாரா? சத்தியாக்கிரக தர்மம் பரவுமா? இந்த சத்தியாக்கிரக விரதத்தை இந்தியா தேசத்திலுள்ள முப்பத்திரண்டு கோடி ஜனங்களும் ஒரே பிடியாகக் கைக்கொள்வார்களானால், இந்த சட்டமும் ஒழிந்து போம். இந்திய ஜனசமூகம் ஆத்ம சக்தி மிகுந்து உயர்ந்து ஓங்கிவிடும்; இந்திய நாட்டை தற்காலம் ஆளும் பாக்கியம் பெற்றிருக்கும் அதிகார வர்க்கத்தினரும் மனம் தெளிவடைந்து சீர்திருத்தம் பெறுவார்கள். ஆகையால் முக்கியமாக, நீ செய்ய வேண்டியது என்னவென்றால், எத்தனை மனிதர்களுடைய மனத்தை சுத்தம் பண்ணிவிடலாம் என்ற முயற்சியிலேயே இரவும் பகலும் இருக்க வேண்டும்.

சிறைச் சாலைக்குள் குற்றங்கள் செய்து, பஞ்சமா பாதகங்கள் செய்து ஜன சமுதாயத்துக்கு விரோதம் செய்து சென்றாலே அவமானம்; ஆனால் தவச் சாலைக்குச் செல்வது போல அடங்கின மனத்தினராய் ஆனந்தத்துடனே, களங்கமற்ற இருதயத்துடன், ஜன சமுதாயத்தினுடைய ஸ்வதந்திரத்தைக் காப்பாற்றுவதற்காக கம்பீரமாக சிறைச்சாலைக்குச் செல்லுதல் வெகுமானமேயாம். ஆகையால், சகோதரா மயங்காதே, பிரமிக்காதே, சத்தியாக்கிரகியாய் விடு. வந்தே மாதரம்.

ஒரு தேச பக்தரின் விடுதலையைக் கொண்டாட இரு தேச பக்தர்கள் சிறை

விபின் சந்திரபாலரின் விடுதலையைக் கொண்டாடியதால் வ.உ.சி., சிவா என்ற இரு தேச பக்தர்கள் சிறைக்குச் செல்ல வேண்டியதாயிற்று.

அல்லாஹு அக்பர்

வந்தே மாதரம், அல்லாஹு அக்பர் (ஆண்டவனே தலைவன்) அல்லாஹ் அன்ஜர் (இறைவன் வெற்றி பெற வைப்பவன்) தேவநாம சங்கீர்த்தனம் எனும் சமய வழிப்பட்ட முழக்கங்களையும் காளியின் மீது ஆணையிடுமாறும் சிவா தனது வீர உரையின்போது குறிப்பிடுவார்.

07.07.1908 – 02.11.1912

'அந்நிய ஆட்சியால் ஏற்படும் அபாயங்கள்' எனும் தலைப்பில் 19.02.1908இல் அவர் ஆற்றிய உரையும், 23.02.1908-இல் நிகழ்த்திய பேருரையும், தூத்துக்குடியில் கோரல்மில் வேலை நிறுத்தத்தின்போது ஆற்றிய உரைகளும், தூத்துக்குடி தர்மசங்கத்தில் நடைபெற்ற கூட்டத்தில் பேசியதும், ரஷ்யப் புரட்சியைப் பற்றி சிவா மேற்கோள் காட்டியதும், வங்காளத்து 'யுகாந்தர்' ஏடு குறித்து புரட்சி முழக்கங்கள் செய்ததும், அரவிந்தர், திலகர் ஆகியோரை மேற்கோள்காட்டிப் பேசியதும் சிவாவை உரிமை முழக்கப் பேச்சுக்காகவே சிறைக்கு அனுப்பியது. 07.07.1908 சிறை சென்ற சிவா 4 வருடங்கள் 4 மாதங்களுக்குப் பின்னர், 02.11.1912இல் விடுதலையானார். 4 வருடங்கள் பதினொரு மாதங்களுக்குப் பின் 24.12.1912-இல் வ.உ.சி. விடுதலையானார்.

வீரவாஞ்சி அய்யர் (17.06.1911)

வஉசியின் சுதேசி கப்பல் கம்பெனி அழிவதற்குக் காரணமான நெல்லை மாவட்ட ஆக்டிங் கலெக்டர் ராபர்ட் வில்லியம் டி எஸ்கார்ட் ஆஷ் என்பவரை செங்கோட்டையைச் சார்ந்த ரகுபதி

அய்யரின் புதல்வரான வீர இளைஞர் வாஞ்சி அய்யர் மணியாச்சியில் 17.06.1911-இல் சுட்டுக் கொன்று தானும் சுட்டு மடிந்த வீர வரலாறு விரிவாக எழுதப்பட வேண்டியது ஆகும்.

நாடு கடத்தல் இல்லை ஏன்?

அந்தமான் தீவில் கைதிகள் அதிக அளவில் அடைக்கப்பட்டிருந்தால் மேலும் கைதிகளை அங்கு அனுப்ப வேண்டாமென்று அரசு ஆணையிட்டிருந்தது.* அவ் ஆணை 1911-இல் நீக்கப்பட்டது.** ஒருவரை நாடு கடத்த வேண்டுமென்றால் குறைந்தது ஆறு ஆண்டுகளாவது இருக்க வேண்டும் என்பது விதி. 1911-இல் வ.உ.சி.க்கும், சிவாவுக்கும் தண்டனை உயர்நீதிமன்ற அப்பீலுக்குப் பின்னர் சில காலமே இருந்ததால், வ.உ.சி.யையும், சிவாவையும் நாடு கடத்தவில்லை.***

தேசபக்த இரட்டையர்

சிதம்பரம்பிள்ளையும் அவர் தோழர் சுப்பிரமணியசிவமும் திருநெல்வேலியில் தோற்றுவித்த தேசிய உணர்ச்சி வெள்ளத்தை நினைத்துப் பார்க்கும் போது, அந்த இளமை எவ்வளவு ஆனந்தமாயிருந்தது எனத் தோன்றுகிறது. தமிழகத்தின் உறுதியான தேசீய சுதந்திர அடிப்படையும் இந்தத் தேச பக்த வீர இரட்டையரின் திருப்பணி தானே?

திருநெல்வேலி சந்திப்பிற்கு அருகே தாமிரபருணி ஆற்றில் தண்ணீர் குறைந்து போயிற்று. தைப்பூச மண்டபம், அதில் நின்று கொண்டு இருவர், நாற்புறமும் குழுமியிருந்த மக்கள் வெள்ளத்தை நோக்கி, மழை கொட்டுவது போல, தமிழ்ச் சொற்பொழிவுகள் செய்து கொண்டிருந்தனர்.

சுப்பிரமணிய சிவாவும் சிதம்பரனாரும் தங்கள் குருமூர்த்திகளான திலகர், பாலர் (விபின் சந்திர பாலர்)

---

* G.O.No. 366, Judicial, 03.03.1906.

** G.O.No. 968, Judicial, 15.06.1912.

*** ஆ.ரா.வேங்கடாசலபதி, வ.உ.சி. கடிதங்கள், சென்னை, 1984, ப. 147.

முதலானவரின் தீவிரக் கொள்கைகளை அதிதீவிரமாக்கி திருநெல்வேலி காரசாரம் ஏற்றிப் பரிமாறிக் கொண்டிருந்தனர். சிறை புகுந்த விபின் சந்திர பாலரின் விடுதலைத் திருநாள் வைபவக் கொண்டாட்டத்தை முன்னிட்டு நிகழ்ந்த சிறப்புச் சொற்பொழிவுகள் அவை.

வீரக்கனல் – புரட்சிப் புயல்

சுப்பிரமணிய சிவம் அங்கு மொய்த்திருந்த மக்களை நோக்குவதற்காக நாலு திசைகளிலும் திரும்பித் திரும்பி ஆடி அபிநயித்துப் பேசிக் கொண்டிருந்தார். இவரது சொற்பொழிவைக் கேட்க வேண்டும் என்றே தூரத்திலுள்ள நாட்டுப்புறங்களிலிருந்தும் மக்கள் திரண்டு வந்திருந்தனர். தன்னந்தனியே ஊரூராகச் சென்று ஏற்கெனவே தேசியப் பிரச்சாரம் செய்திருந்தவர். பொதுக் கூட்டங்களில் தொடர்ந்து பேசி வேதாந்தத்தை மெருகு கொடுத்துப் புதிய தேசிய ஆவேசத்தை மூட்டி வந்தவர். சுமார் 23 அல்லது 24 வயதுள்ள இளைஞர். இவரது துறவிக் கோலமும் துடிதுடிப்புப் பேச்சும், வேதாந்தத்தைத் தேசிய வீரக்கனலாக்கிய அதிசயத்திறனும் துணிவும், இவர் சொற்களை ஆவலாய் அமுதமாய்ப் பருகி வெறி கொள்ளுமாறு மக்களைப் பக்குவப்படுத்தியிருந்தன.

புயல் காற்றும் மழையும் செய்த பூசலுக்கிடையே, ‘ஆற்று வெள்ளம் சீறிப் பொங்கி வருகிறதோ’! என்று கூடப் பிரமித்துப் போனேன். சுப்பிமணிய சிவத்தின் குரலையும் பேச்சையும் கேட்டதும் அந்த வெள்ளம் தைப்பூச மண்டபத்தைத் தொட்டுப் போயிற்று; முட்டிச் சுற்றிப் பெருகியது. கப்பலோட்டிய தமிழரின் அந்தக் கப்பலிலேயே வெள்ளையர் மூட்டை முடிச்சுகளுடன் விடை கொண்டு ஏறிப் போவதாகவும் தோன்றியது ஒரு கணம். சிவமோ, ‘போடு மூட்டைகளைப் போட்டு விட்டுப் போ!’ என்று கண்டிப்பாகக் கட்டளையிட்டதாய்த் தோன்றியது மறுகணம்.

தமிழகத்தின் விடுதலைக்கு மட்டுமா? பண்டிதர் பிடிப்பிலிருந்து தமிழின் விடுதலைக்காகவும் இத்தேச பக்தர் இரட்டையர் அரும்பாடுபட்டிருக்கிறார்கள். இருவரும் தூய தமிழர்கள். பிறமொழிக் கலப்பில்லாத தனித்தமிழில் எழுதவில்லை; ஆனால் தமிழர்களின் நெஞ்சிலும் நாவிலும் பழகி வரும் அழகுத் தமிழை, ஆண்மைத் தமிழை இருவரும் பயன்படுத்திக் கொண்டார். வழி வழி வந்த தமிழ்ப் பண்பாட்டில் ஊன்றிக் கனிந்த, கள்ளங் கபடற்ற, இவர்கள் உள்ளத்தைத் தூய தமிழ் உள்ளம் என்றே சொல்லத் தோன்றுகிறது.*

ஞான பாநு – 13.04.1913

சிறையிலிருந்து விடுதலையாகி சென்னையில் துணைவியார் மீனாட்சியுடன் வாழ்ந்து வந்த சிவா ஞான பாநு என்ற மாத இதழை 13.04.1913-இல் தொடங்கினார். இந்த இதழில் வ.உ.சி.யும், பாரதியும் கட்டுரைகள் பல எழுதியுள்ளனர்.**

முதல் இதழிலேயே வ.உ.சி., பாரதி, சிவா மும்மூர்த்திகளின் படைப்புகளும் வெளியாயின.

15.05.1915

15.15.1915-இல் சிவாவின் மனைவி மீனாட்சி அம்மையார் மறைந்தார். 1916 அக்டோபரில் மங்கலம் சண்முக முதலியார் ஞானபாநுவை விலைக்கு வாங்கினார். 1917 ஏப்ரல் வரையில் அவரது பொறுப்பில் ஞானபாநு வந்தது.

வ.உ.சி., ஞானபாநுவில் மனிதனும் அறிவும், மனமும் உடம்பும், வினையும் விதியும், அகமும் வாழ்வும், மனத்தின்

---

* பி.ஸ்ரீ., நான் அறிந்த தமிழ்மணிகள், முதற் பகுதி, சென்னை, 1988, பக். 33 – 37.

** ஈசாவாஸ்யோ பநிஷத், கேநோபநிஷத், தாயுமானவர் வாழ்த்து.

*** சின்னசங்கரன் கதை, ஒளியும் இருளும், மது, தமிழில் எழுத்துக்குறை, கண்ணன் என் தாய், யோக சித்தி, வேய்ங்குழல் இறவாமை, பாப்பாப் பாட்டு, ஞானபாநு, அக்திஸ்தோமம் ஆகிய படைப்புக்கள் ஞானபாநுவில் பாரதி எழுதியவை ஆகும்.

தன்மையும் வன்மையும் சுபாவத்தை ஏற்படுத்துதல், செய்தலும் அறிதலும் ஆகிய கட்டுரைகளை எழுதினார்.

வீரவிளக்கு வ.வே.சு. அய்யர்

அகஸ்தீன் எனும் மகாத்மாவின் விண்ணப்பம் எனும் தொடரை ஞானபாநுவில் வீரவிளக்கு வ.வே.சு. ஐயர் எழுதினார்.

23.06.1916 – பிரபஞ்சமித்திரன்

'பிரபஞ்சமித்திரன்' என்ற வார இதழில் 23.06.1916 முதல் சிவா கார்யஸ்தர் ஆனார். சிவா 1916-களில் 'நாரதர்' என்ற புனைப் பெயரில் கட்டுரைகளை எழுதி வந்தார். 1917இல் பி.வரதராஜுலு நாயுடு இதன் உரிமையாளரானார்.

1919

'இந்திய தேசாந்திரி' என்ற வாரப் பத்திரிகையில் (இந்தியன் எமிகிரெண்ட்) சிவா துணை ஆசிரியராகப் பணியாற்றினார். 18.07.1919-இல் ஆட்சேபகரமான கட்டுரைகள் எழுதியதற்காக சிவா பத்திரிகையிலிருந்து நீக்கப்பட்டார். *

வெ.சாமிநாதசர்மா – பஞ்சாப் படுகொலை

பஞ்சாப்பில் ஜாலியன் வாலாபாக் படுகொலை பற்றி ஏப்ரல் 1919 என்று நூலினை வெ.சாமிநாத சர்மா எழுதினார். பஞ்சாப் படுகொலையை எதிர்த்து சென்னை கடற்கரையில் கூட்டங்கள் சுப்பிரமணிய சிவாவால் கூட்டப்பட்டது. கூட்டத்தில் திரு.வி.கலியாண சுந்தர முதலியாரும் கலந்து கொண்டார். **

1920

சென்னையில் 'டிராம்வே' தொழிலாளர்கள் நடத்திய

---

* இந்திய விடுதலைக்கு முந்தைய தமிழ் இதழ்கள் தொகுதி–4, பதிப்பாசிரியர் இ.சுந்தரமூர்த்தி, மா.ரா.அரசு, சென்னை, 2004, பெ.சு.மணி, இதழாளர் சுப்பிரமணிய சிவம், ப. 119.

** திரு.வி.கலியாண சுந்தரனார், திரு.வி.க. வாழ்க்கைக் குறிப்புக்கள், சென்னை, 1944, ப. 310.

வேலை நிறுத்தத்தில் சிவா தொழிலாளர்களுக்காக ஓயாமல் உழைத்தார்.

ஜார்ஜ் ஜோசப்

மதுரை ஹார்விமில் வேலை நிறுத்தத்தில் பிரபல தொழிற் சங்கத் தலைவர் ஜார்ஜ் ஜோசப்புடன் சிவா சில நாட்கள் தங்கி காரியங்கள் ஆற்றினார். 1920 கல்கத்தா விசேஷ காங்கிரஸ் கூட்டத்திற்கும் சிவா சென்று வந்தார்.*

14.08.1920

ஆம்பூரில் நடைபெற்ற கிலாபாத் மாநாட்டில் சிவா கலந்து கொண்டார். அதனைத் தொடர்ந்து விழுப்புரம் அரசியல் மாநாட்டிலும் சிவா கலந்து கொண்டார்.**

பாரத ஆசிரமம்

1921-இல் காரைக்குடியில் 'பாரதாசிரமம்' முதன் முதலில் தொடங்கப்பட்டது. சிவா இளைஞர்களை உறுப்பினர்களாக்கி, தேச பக்த உணர்ச்சியூட்டினார். வீர சிவாஜி, தேசிங்கு ராஜன் நாடகங்களை எழுதிய சிவா அதில் இளைஞர்களை நடிக்கச் செய்து, நாடகங்கள் மூலம் நாட்டுப்பற்றை ஊட்டினார். 'நளினி சுந்தரி' அல்லது 'நாகரிகத்தின் தட்புடல்' என்ற நாவலையும் சிவா எழுதி வெளியிட்டார்.

14.01.1921 – ஸ்வதந்திரானந்தர்

சந்நியாசியைப் போல கஷாய உடையைத் தரித்த சிவா அன்று முதல் ஸ்வதந்திரானந்தர் என்ற பெயரையும் பூண்டார்.

சிவாவின் படைப்புக்கள்

மேற்சொன்ன நாடகங்கள், நாவல் தவிர்த்து, சிவா, ஸ்ரீஜத் சுப்பிரமணிய சிவம் ஜீவிய சரித்திரம், மோட்ச சதான

* ரகமி, சுப்ரமண்யசிவம், சென்னை, 1989, ப. 127.

** த.ஸ்டாலின் குணசேகரன், விடுதலை வேள்வியில் தமிழகம், பாகம்–I, ஈரோடு, 2000, இரவீந்திரபாரதி, சுப்பிரமணிய சிவா, ப. 216.

இரகஸ்யம், ஞானரத்னம், பகவத் கீதா சங்கிரகம், ஸ்ரீமத்வ விஜயம், ஸ்ரீராமாநுஜ விஜயம், ஸ்ரீ சங்கர விஜயம், ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர் விரிவான சரித்திரம் 703 பக்கங்கள், 41 அத்தியாயங்கள், ஸ்ரீபரமஹம்ஸ இராமகிருஷ்ணர் விஜயம், ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸர் பிரஹ்மானந்த சம்பாஷணைகள், சுவாமி விவேகானந்தர் விரிவான சரித்திரம் - 520 பக்கங்கள் - 27 அத்தியாயங்கள், சுவாமி விவேகானந்தரின் அத்வைத சம்பாஷணைகள், சுவாமி விவேகானந்தரின் ஆத்ம ஞானரத்னம் எனும் 1004 அரிய உபதேச மொழிகள், சுவாமி விவேகானந்தர் அமெரிக்காவில் தம்முடைய சீடர்கட்கு உத்தேசித்த அருள்மொழிகள், சுவாமி விவேகானந்தர் எதிரொலிகள் (இதில் சிவாஜி மகாராஜாவின் சரித்திரம் அடங்கியுள்ளது), சுவாமி விவேகானந்தர் கடிதங்கள் 1, 2, 3 பாகங்கள்; தனித்தனி, சுவாமி விவேகானந்தரின் தற்கால இந்தியா, சுவாமி விவேகானந்தரின் கிழக்கும் மேற்கும், வேதாந்த ரகஸ்யம், திலகர் - காந்தி தரிசனம், வீரரத்ந பாஜிப்ரபு தேஷ்பாண்டே

இவற்றுள் சச்சிதானந்தசிவம், ஆத்மஞானரத்னம், பகவத் கீதா சங்கிரகம் ஆகிய மூன்றும் சிறையில் எழுதப் பெற்றன. மேற்காணும் நூல்களில் ஐந்து நீங்கலாக பிற யாவும் ஆன்மிகத் துறைக்கு உரியன. இவற்றுள்ளும் பன்னிரண்டு நூல்கள் இராமகிருஷ்ணர் இயக்கத்திற்குப் படைக்கப் பெற்றன என்பது குறிப்பிடத்தக்கது.*

17.11.1921

வெள்ளை அரசாங்கத்தை எதிர்த்து சிவா உரையாற்றினார் என்பதற்காக 17.11.1921-இல் சிவா கைது செய்யப்பட்டார். இரண்டரை வருட கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது. 12.01.1922 வரை சிறையில் வாடிய பின் உடல்நிலை காரணமாக சிவா விடுதலையானார்.

---

* பெ.சு.மணி, வீர முரசு சுப்பிரமணிய சிவா, சென்னை, 1984, பக். 211 – 213.

27.11.1922

சிவா மூன்றாம் முறையாக ஆங்கிலேய அரசாங்கத்தால் கைது செய்யப்பட்டார். பின்னர் ஜாமீனில் விடுதலையானார். சாத்தூரில் நடைபெற்ற அரசியல் மாநாட்டில் கலந்து கொண்டார்.

15.02.1923

பாரத மாதா கோவிலுக்கு, பாப்பாரப்பட்டி மிட்டா பல்லூர் பேட்டையிலிருக்கும், செங்குந்தர், மு.இராமு முதலியாரின் புதல்வர் மு.ரா.சண்முக முதலியாரிடம் 500 ரூ. கிரையத்திற்கு இடத்தை வாங்கினார் சிவா.

01.05.1923 – மே தினம்

தொழிலாளர்கள் விவசாயிகள் கட்சி சார்பில் சிங்கார வேலு மே தினக் கொண்டாட்டத்தை அறிவித்தார். உயர்நீதி மன்றக் கடற்கரையில் ஒரு கூட்டம் நடைபெற்றது. திருவல்லிக்கேணி கடற்கரைக் கூட்டத்தில் சுப்பிரமணிய சிவா, கிருஷ்ணசாமி சர்மா, M.P.S. வேலாயுதம், சங்கர்லால் ஆகியோர் பேசினர்.*

22.06.1923

சேலம் ஜில்லா தற்போது தருமபுரி மாவட்டம் பாப்பாரப்பட்டியில் பாரத மாதா கோவிலுக்கு அஸ்திவாரக் கல்லை, சிவா தேசபந்து சித்தரஞ்சன்தாஸ் தலைமையில் நாட்டினார்.

1923 செப்டம்பர்

சேலத்தில் நடைபெற்ற தமிழ் மாகாண மாநாட்டில் சிவா கலந்து கொண்டார்.

---

* 02.05.1923, The Hindu 02.05.1923, 03.05.1923 சுதேசமித்திரன் & கே.முருகேசன், சி.எஸ்.சுப்பிரமணியம், சிங்காரவேலு தென்னிந்தியாவின் முதல் கம்யூனிஸ்ட், சென்னை, 1991, ப. 94.

1923 அக்டோபர்

கிருஷ்ணகிரி, பாப்பாரப்பட்டி, கோயம்புத்தூர் பகுதியில் சுதேசியப் பிரச்சாரத்தில் பெரிதும் ஈடுபட்டார் சிவா.

1924 ஜனவரி – தொழுநோய் – இரயில் பயணத் தடை

சிவாவின் தொழுநோயைக் காரணம் காட்டி, அவரை இரயிலில் பயணம் செய்யக் கூடாதென்று தடை விதித்து வெள்ளையர் அரசு ஆணையிட்டது.

04.05.1924 – எஸ்.சீனிவாச ஐயங்கார்

திருவல்லிக்கேணி கடற்கரையில் எஸ்.சீனிவாச ஐயங்கார் தலைமையில் சிவா உரையாற்றினார்.

11.05.1924 – ஏ. அரங்கசாமி ஐயங்கார்

*திருவல்லிக்கேணி கடற்கரையில் ஏ.அரங்கசாமி ஐயங்கார் தலைமையில் சிவா உரையாற்றினார். இவைகள் குறித்து வழக்கு நடைபெற்றது. சென்னை எழும்பூர் பிரதம மாகாண மாஜிஸ்திரேட் டாக்டர் கே.கே. பண்டாலே முன் விசாரணை நடைபெற்றது. இவ்வழக்கில் சிவா தானே நீதிமன்றத்தில் வாதாடினார்.**

எஸ்.சத்தியமூர்த்தி ஐயர்

*சிவாவிற்காக தீரர் எஸ்.சத்தியமூர்த்தி ஐயர் வழக்காடினார். எஸ்.சீனிவாச ஐயங்கார், ஏ.அரங்கசாமி ஐயங்காரும் சிவா தரப்பில் சாட்சியம் கூறினர். பின்னர் உறுதி மொழி தந்து சிவா விடுதலையானார்.***

11.09.1924

திருவல்லிக்கேணியில் தான் தங்கியிருந்த இருசப்பகிராமணி தெருவிற்கு அருகிலுள்ள விளையாட்டு

* சிவா நீதிமன்றத்தில் பல்வேறு கட்டங்களில் தாக்கல் செய்த மனுக்கள், விவாதங்கள் இறைவன் அருளால் தனி நூலாக வெளிவரும் – செ. திவான்.

** ம.பொ.சிவஞானம், விடுதலைப் போரில் தமிழகம், முதல் தொகுதி, சென்னை, 1982, பக். 586, 589, 590, 591.

மைதானத்தில் கவி பாரதியாரின் நினைவு நாளை சிவா, வெகு சிறப்பாகக் கொண்டாடினார்.

1925 ஏப்ரல்

ஈரோடு, பவானி, உடுமலைப் பேட்டை, தாராபுரம், பழனி, திண்டுக்கல், சோழவந்தான் வழியாக மாட்டு வண்டியில் பயணித்த சிவா மதுரைக்கு 09.04.1925-இல் வந்து சேர்ந்தார்.

10.05.1925

மதுரையில் முகாமிட்டிருந்த சிவா 10.05.1925-இல் '**இந்தியாவின் சுதந்திர யுத்த தினம்**' என்று கொண்டாட்டத்தை நடத்தினார்.

நடிகர் சிவா – சமர்த்தராமதாஸர்

மதுரையில் ஸ்ரீ பாரதி விலாஸ சபை ஆதரவில் 'சிவாஜி', 'தேசிங்' முதலிய நாடகங்களை நடத்தி சுதந்திர எழுச்சியை ஏற்படுத்தினார். சிவாஜி நாடகத்தில் சமர்த்தராமதாஸராக வேடம் பூண்டு நடித்தார் சிவா.

கான்பூர் பொதுவுடைமை மாநாடு

அங்கிருந்து மேற்கு கடற்கரை ஓரமாய் பம்பாய் (மும்பை) சென்று கான்பூரில் நடைபெறும் பொதுவுடைமை மாநாட்டில் கலந்து கொண்டுவிட்டு, கல்கத்தா சென்று, ஸ்ரீதேசபந்து சித்தரஞ்சன் தாஸரைப் பார்க்க வேண்டுமென்று சிவா எண்ணிக் கொண்டிருந்தார்.*

மூன்று மாதத்திற்கு மேல் மதுரையில் தங்கியிருந்த சிவாவின் உடல்நிலை மோசமானது. அதனால் மாநாட்டிற்குச் செல்ல உடல்நிலை இடந்தரவில்லை.

'நீ இந்த உடலுடன் இவ்வளவு பாடுபட்டது போதும். என்னிடம் வந்துவிடு' என்று இறை அழைப்பு போலும்.

---

* ரா.ஸ்ரீநிவாஸவரதன், சுப்பிரமணிய சிவம், ப. 86.

22.07.1925 – சுந்தர பாரதி

மதுரையிலிருந்து, தனது நண்பர் சுந்தர பாரதியுடன் உடல்நிலை மோசமான சிவா, பாப்பாரப்பட்டி பாரதபுரத்திற்கு, பாரதாசிரமத்திற்கு 22.07.1925-இல் வந்து சேர்ந்தார்.

23.07.1925

ஆசிரமத்திற்கு வந்த மறுநாள் தனது 41-வது வயதில், 23.07.1925-இல் சிவா காலமானார்.

சிவாவும் முஸ்லிம்களும் – ரசூல்கான் சாய்பு

*பாப்பாரப்பட்டி பாரத ஆசிரமத்திற்கு இடம் வாங்கிய போது சாட்சி கையெழுத்திட்டவர்களில் ஒருவர் ரசூல்கான் சாய்பு என்ற முஸ்லிம் சகோதரர் ஆவார்.** *

முஹம்மது அலி

*சிவாவின் சீடர்களில் மதுரை சுந்தரபாரதி, சிதம்பர பாரதி, சாரங்கபாணி பாரதி, ஸ்ரீநிவாசவரதன், சங்கரன்கோவில் S.N. சோமயாஜுலு, கல்கி சதாசிவம், தியாகராஜசிவம், பிச்சி சிவம், ஸ்ரீநிவாச பாரதி, கிருஷ்ணகுந்து ஹோட்டல் எவரெஸ்டு ஸ்ரீ சுந்தரம், கி.சுந்தரராஜ அய்யங்கார், ரங்கநாதராவ், திருக்கோயிலூர் குமாரசாமி, சுப்பிரமணிய சர்மா, ராகவ பாரதி, கே.ஆர். ஸ்ரீநிவாச அய்யங்கார், ராமகிருஷ்ணசர்மா, சுப்பராயலு, எதிர்கோட்டை ரங்கனாத அய்யங்கார், கோவிந்தன் சேர்வை, ராமசுப்பிரமணியம், அய்யாவையங்கார், பாபுராவ், திருமயம் கிருஷ்ணமூர்த்தி, சாம்பசிவம் பாளையங்கோட்டை ஸ்ரீநிவாஸ ஆழ்வார், மதுரை பத்மயானி அம்மாள், சிவகிரி சங்கரன், முஹம்மது அலி*** ஆகியோரைக் குறிப்பிடலாம்.*

தனது அறிக்கையில் சிவா வந்தே மாதரம், ஓம், <u>அல்லாஹு அக்பர் தலைமை ஸ்தானம் பாரதபுரம்,</u>

---

* இரா.சிசு பாலன், தியாகி சுப்பிரமணிய சிவா கடிதங்கள், சென்னை, 2012, ப. 67.

** பெ.சு.மணி, வீரமுரசு சுப்பிரமணிய சிவா, ப. 186., ரா.ஸ்ரீநிவாச வரதன், முற்கூறிய நூல், பக். 91, 92.

பாப்பாரப்பட்டி போஸ்டு சேலம் ஜில்லா என்றே குறிப்பிடுவார்.

சச்சிதானந்த சிவம்

சேலம் சிறையில் தனது முதல் சிறைவாசத்தில் வாடிய போது 15.03.1911-இல் சிவா எழுதிய 'சச்சிதானந்த சிவம்' நூலில்,

'கால தேசங்கட்குத் தக்க பிரசாரம் ஸ்ரீ கிருஷ்ணனாகவும், ஸ்ரீ சங்கரராகவும், மத்வராகவும், ராமாநுஜராகவும், மகமத் [முஹம்மத் நபி (ஸல்)] ஆகவும், இயேசு கிறிஸ்துவாகவும், புத்தராகவும் அவதாரம் செய்தவர் அவரே' என்று குறிப்பிடும் இடத்தில் அண்ணல் நபி (ஸல்) அவர்களைப் போற்றி நினைவு கூர்ந்துள்ளார்.

முகம்மதிய மதம் (இஸ்லாம் மார்க்கம்)

அதே நூலில் பக்கம் 15-இல் சிவா எழுதுகிறார்.

True hope is swift and Flies with swallow's wings Kings it makes Gods and meaner creatures Kings *என்றபடி,* **பரிபூரண நம்பிக்கையையே ஒரு மனிதனுடைய உயர்வுக்கும் தாழ்வுக்கும் காரணமாயிருக்கின்றது. மகம்மதிய மதத்திற்கு (இஸ்லாம் மார்க்கத்திற்கு, நம்பிக்கையே ஆணி வேர் போன்றது. சாதாரண நம்பிக்கையாலன்றோ கோடான கோடி ஜனங்கள் மகமதியர்களாய் (முஸ்லிம்களாய்) மகா வைராக்கிய சீலர்களாய் விளங்குகிறார்கள் என்று இஸ்லாம் மார்க்கத்தின் மஹிமையைப் போற்றிப் புகழ்ந்துள்ளார்.**

அதே நூலில் பக்கம் 46-இல்,

மிருகத்தன்மை வாய்ந்த மானிடர்களின் பேரிலுள்ள இரக்கத்தாலுமே அவர்கட்குத் துன்பம் நேரிடுகின்றது. . . மகம்மது (முஹம்மது நபி (ஸல்)) என்பது தப்பியோடிய ஒட்டமும், சங்கரரின் ஜாதிப் பிரஷ்டத்துவமும், திருஷ்டாந்தங்களாகும்.

இவ்வாறு தனது நூல்களில் இஸ்லாம் மார்க்கம் பற்றியும், அண்ணல் நபி (ஸல்) அவர்களையும் போற்றிப் புகழ்ந்து சமயப் பொறையின் சின்னமாகத் திகழ்பவர் சிவா.

சிவா குடும்பமும் முஸ்லிம்களும்

சிவாவின் உடன்பிறந்த சகோதரர் ஸ்ரீவைத்தியநாத சர்மா. அவரது துணைவியார் முத்துலெட்சுமி. சிவாவின் மூத்த தங்கை தைலம்மாள். அவரது கணவர் ஸ்ரீகாமேஸ்வர ஐயர். இதன் பின் ஒரு ஆண் குழந்தை சிவாவின் பெற்றோருக்குப் பிறந்து இறந்து விட்டது. சிவாவின் கடைசி தங்கை ஞானாம்பாள். இவரது கணவர் சுப்பிரமணிய ஐயர்.

வைத்தியநாத சர்மா

சிவாவின் சகோதரர் வைத்தியநாத சர்மாவின் ஒரே மகள் மங்களம். இவரது கணவர் கே.ராமதுரை ஐயர். இத்தம்பதியருக்கு சுவாமிநாதன், லலிதாம்பாள், ஜானகி, ஜெயமணி, அலமேலு, விஜயலட்சுமி, உமா, ராமன் ஆகியோர் பிள்ளைகள் ஆவர்.

சபாபதி சர்மா

சிவாவின் சகோதரர் வைத்தியநாத சர்மாவின் ஒரே மகன் சபாபதி சர்மா. இவரது துணைவியார் விஜயலட்சுமி அம்மாள்.

சுப்பிரமணிய சிவா

இத் தம்பதிகளுக்கு சுப்பிரமணிய சிவா ராஜலட்சுமி, சத்திய நாராயண சிவம், கல்யாண ராமன், வெங்கட்ராமன், அனந்த ராமகிருஷ்ணன் ஆகியோர் பிள்ளைகள் ஆவர்.

வேணு கோபால சர்மா

ஞானாம்பாளின் ஒரே புதல்வரான வேணு கோபால் சர்மா. இவரது துணைவியார் பாக்கியலட்சுமி. தனது தாய்மாமனாரான சுப்பிரமணிய சிவாவைப் போல வெள்ளையர் எதிர்ப்புப் போரில் ஈடுபட்டு, மறியல்களில் நாட்டு வெடிகுண்டுகளை வீசியவர். இவருக்கு 9 குழந்தைகள்.

7 பேர் மறைந்து விட்டனர். இவரது மகன் ரவிசங்கர். மகள் மாதங்கி.

கீழக்கரை ஹாஜா அலாவுதீன்

கீழக்கரையைச் சேர்ந்த ஹாஜா அலாவுதீன் 1982-இல் இஸ்லாமிய முறைப்படி சிவாவின் பேத்தியான மாதங்கியைத் திருமணம் செய்து கொண்டார்.

முர்ஜிதா பேகம்

சுப்பிரமணிய சிவாவின் தங்கை ஞானாம்பாளின் புதல்வர் வேணுகோபால் சர்மாவின் புதல்வி மாதங்கி, இஸ்லாமிய மார்க்கத்தில் முர்ஜிதா பேகமானார். மாதங்கி என்ற முர்ஜிதா பேகம் - கீழக்கரை ஹாஜா அலாவுதீன் தம்பதியருக்கு இரு குழந்தைகள் உண்டு.

சுதந்திரச் சங்கநாதமாக

செக்கிழுத்த செம்மல் வ.உ.சி.யின் சகோதரராக

சக்திதாஸன் என்ற பாரதியின் உயிர் நண்பராக

சிறைவாசங்களுக்கு அஞ்சாத சிங்கமாக

செந்தமிழை வளர்த்திட்ட பத்திரிகையாளராக

சர்வ சமயப் பொறை கொண்டவராக

சாகும்வரை சுதந்திரத்திற்காக

சரீர சுகமில்லாத நிலையிலும்

சதா உழைத்திட்ட ஸ்வதந்திரானந்தனாக

சுப்பிரமணிய சிவா நாட்டின் சுதந்திரத்திற்கு ஆற்றிய செம்பணிகளை, தியாகங்களைச் செந்தமிழ் இருக்கும் காலமெல்லாம் சொல்லிக் கொண்டே இருக்க வேண்டும். சந்தான லட்சுமி. (நாட்டுக்கு உழைத்த நல்லவர்) சுப்பிரமணிய சிவா தந்தார். தியாக சீலர் சிவாவின் கட்டுரைகளையும், வரலாற்றுக் குறிப்புக்களையும் ராஜேஸ்வரி தந்தார். நான் கண்ட நால்வரில் வெ.சாமிநாத சர்மா சுப்பிரமணிய சிவம்

தந்தார். தேசபக்தனில் சிவாவே தனது 'பிரார்த்தனை'யைத் தந்தார்.

நித்தியா னந்தனே! நின்மல நாதனே!
சத்தியம் ஒன்று சாற்றுவன் கேண்மோ
அடியுடன் என்னை அர்ப்பணம் செய்தேன்
படிதனில் எனக்குப் பந்துக்களில்லை
உனையே நம்பினேன் உலகில் துணையென
வினையே விதிதான் விதியே வினைதான்
ஆயினும் உன்றன் அருள்சக்தியினால்
காயினும் சரியே கனியினும் சரியே
நீயே என்ற நிலையை நம்பினேன்
தாயே போல்வாய் தண்ணருள் புரிவாய்;
அடியேனுக்கொரு ஆசையிங்குண்டு
படிதனில் எந்தன் பாரத தேசம்
பெரியோ ரெல்லாம் பிறந்த தேசம்
சிறியோரெல்லாம் சீர்படும் தேசம்
நல்லோ ரெல்லாம் நாடிய தேசம்
பொல்லார் தாமும் புகழும் தேசம்
செழித்துக் கொழுத்துத் திகழ்ந்த தேசம்
அழித்தும் அழித்தும் அக்ஷய தேசம்
உண்ட வீட்டுக்கு இரண்டகம் செய்யும்
முண்டர் தமக்கும் உணவிடும் தேசம்
சத்தியம் பொறுமை சாந்தம் தைர்யம்
நித்தியமாக நின்றிடும் தேசம்
அவனி தனக்கு ஆத்ம ஞானத்தை

தவநிலை நின்று சாற்றும் தேசம்
துஷ்டர்களுக்கும் சுகத்தைக் கொடுத்து
இஷ்டப்பட்டதை ஈயுந் தேசம்
இந்தத் தேசம் இப்பொழு திருக்கும்
பந்தப் பாங்கைப் பார்த்திடும் போழ்து
சொந்தப் பிள்ளைகள் சோறில்லாமல்
மந்தை மந்தையாய் மாய்ந்து போவதை
எண்ணுந் தோறும் எண்ணுந் தோறும்
அந்தோ! என்றன் ஆவி யுலையுது
வந்தோ ரெல்லாம் வயிற்றி லடிக்கிறார்
அனைவ ரிழவுக்கும் அழுபவர் நாமோ?
மனமோ உடையுது வயிறோ எரியுது
நாவோ குளறுது நானென் செய்கேன்
ஆவோ வென்று அலறுதல் அல்லால்?
அலறினேன் அலறினேன் ஐயகோ வென்று
கலகம் செய்வான் கருதினா னென்றே
அதிகார வர்க்கம் ஆக்ஞை யிட்டதால்
சிறைதனை ஏற்று சிந்தை நோகாது
ஆறு வருடம் அடைபட்டிருந்தும்
ஏறு மென்மனம் இடிபடவில்லை
எந்தன் தேசம் எந்தன் உயிரே
நொந்தும் எந்தன் நுண்ணிய மனந்தான்
திடமுற்றேதான் தெளிந்ததே யன்றி
மடமுற்றேதான் மயங்கியதில்லை
வெளியில் வந்தேன் விடுதலை யடைந்து

களியில் மனிதரைக் கண்ணால் கண்டேன்
வறுமை வியாதி மரணம் பஞ்சம்
சிறுமை இவற்றால் சீரழிகின்ற
தமிழாம் மக்களைத் தட்டி யெழுப்பி
அமிழ்தாம் ஞான ஆனந்த மூட்டி
வீரம் ஆண்மை வெற்றி பெருமை
தீரம் முதலாம் தேசு புகுத்தி
சிறந்தோர் என்றே சீரியர் செப்ப
அறந்தான் செய்ய அன்புடன் முயன்று
பத்திரிகை புத்தகம் பல வழியாக
உரிமை வேண்டி உரிமை வேண்டி
இரவும் பகலும் எழுதி எழுதி
வரவும் என்கை வலிக்குது ஐயோ
மனமும் உடைந்தது மார்பும் நோகுது
இனமும் இல்லை இனியென் செய்கேன்
கொடியதோர் வியாதி கொல்லுது என்னை
படிதனி லிருந்தும் பயன்தா னென்னை? ஆதலால்
இப்பொழுது தொன்று ஈங்குனை வேண்டுவல்
தப்பாம லீந்து தயவுடன் காப்பாய்
எந்தன் ஜனங்கள் ஏற்ற மடைந்து
சொந்த தேசத்தில் சுகமாய் வாழணும்
கண்ணியமாய் நாம் காவல் புரியணும்
அரசு புரியணும் அருள் பெற வேண்டும்
முரசு அடிக்கணும் முழங்கணும் பேரிகை
பயமே இல்லை பயமே இல்லை

ஜெயஜெய ஜெயஜெய ஜெயஜெய வென்றே
இந்திய ரனைவரும் இன்பப் புணாரியில்
முந்த வீழ்ந்து மூழ்கிக் குளித்து
தீதெலாம் அகன்று சீர்பெற வேணும்
ஈதெலாம் செய்தல் ஈசநின் கடனே.*

---

* தேசபக்தன், சித்தார்த்தி வருஷ அனுபந்தம் – மேற்கோள் வெ.சாமிநாத சர்மா, நான் கண்ட நால்வர், புதுக்கோட்டை, 1959, பக். 190–192.

மனப்பூர்வமாய்க் கொடு

> "ஒன்றையும் கேட்காதே; கைம் மாறாக ஒன்றையும் விரும்பாதே. நீ கொடுக்க வேண்டியதைக் கொடு; அது உன்னிடத்தில் திரும்பி வரும். ஆனால் இப்பொழுது அதைப் பற்றி நினைக்காதே. அஃது ஆயிரம் மடங்கு அதிகரித்துத் திரும்பி வரும். ஆனால் கவனம் அதன் மேல் இருக்கக் கூடாது. ஆயினும் கொடுக்கும் சக்தி உனக்கிருக்கட்டும். கொடுக்க மாத்திரம் செய். ஜீவிய காலம் முழுமையும் ஈகையே என்று அறிந்து கொள். நீ கொடுக்கும்படி இயற்கை உன்னைப் பலவந்தம் செய்யும். ஆகையால் மனப்பூர்வமாய்க் கொடு."

என்ற சுப்பிரமணிய சிவாவின் வைர வரிகளை மனத்தில் தாங்கி அவரது பெரு வாழ்வின் சிறு துளியை சிறு நூலாகத் தந்துள்ளேன். இளைஞர்கள்; வருங்கால சமுதாயம் இதனை வாசிப்பதால் நாட்டுப்பற்றும், மொழிப்பற்றும், இனப்பற்றும், தியாக எண்ணமும் சிறு துளியேனும் ஏற்படுமானால் அதுவே எளியேனின் இந்த நூலுக்குப் பெருமை சேர்க்கும் என்பதில் எவருக்கு ஐயமிருக்க முடியும்?





Registered No M 1032

ஞானபாநு.

அறிவுடையா ரெல்லா முடைய ரறிவிலா
ரென்னுடைய ரேனு மிலர்.

பத்திராதிபர்—சுப்பிரமணிய சிவம்.

Vol. 3 தொகுதி. 3	August 1915. ராக்ஷஸ வருஷம் ஆவணி மீ	No. 5 பகுதி 5.

பக்கம்.

[illegible]	... 121
ஸ்ரீஸ்வாமி விவேகானந்தரின் எதிரொலிகள்	124
ஸ்வாமி விவேகானந்தரின் கடிதம்	... 128
தேசபக்த [illegible]	... 130
ஜெர்மன் சக்கரவர்த்தியின் சொத்து	... 135
ஸ்ரீவிவேகானந்த மஞ்சரி	... 136
தெளிவு	... 139
சமாசாரக் குறிப்புகள்	... 140
பலவிஷயக் குறிப்புகள்	... 113
விவேக சூடாமணி	... 1

PRINTED AT THE "SACCHIDHANANDHA" PRESS,
& PUBLISHED AT 'GNANA BHANU' OFFICE, MYLAPORE,
MADRAS.

வருஷ சந்தா { உள்நாட்டுக்கு ரூபாய் 1 12 0
வெளிநாட்டுக்கு ,, 2 4 0

'ஞானபாநு'வின் மேலட்டை



சிறைவாசம்.